Volume: 7 Issue - 5

# வைகறை வெளிச்சம்

மே - 2014

விலை ரூ.20

மு.குலாம் முஹம்மது

ஷஅபான் - 1435



# திருக்குர்ஆன் பாடம்

மௌலவி இல்யாஸ் ரியாஜி



## பாடம் – 17

قُلْ اِنْ كَانَتْ لَكُمُ الدَّارُ الْاٰخِرَةُ عِنْدَ اللّٰهِ خَالِصَةً مِّنْ دُوْنِ النَّاسِ فَتَمَنَّوُا
الْمَوْتَ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ۝٩٤ وَلَنْ يَّتَمَنَّوْهُ اَبَدًا ۢ بِمَا قَدَّمَتْ اَيْدِيْهِمْ ۗ وَاللّٰهُ
عَلِيْمٌ ۢ بِالظّٰلِمِيْنَ ۝٩٥ وَلَتَجِدَنَّهُمْ اَحْرَصَ النَّاسِ عَلٰى حَيٰوةٍ ۛ وَمِنَ الَّذِيْنَ
اَشْرَكُوْا ۛ يَوَدُّ اَحَدُهُمْ لَوْ يُعَمَّرُ اَلْفَ سَنَةٍ ۚ وَمَا هُوَ بِمُزَحْزِحِهٖ مِنَ الْعَذَابِ اَنْ
يُّعَمَّرَ ۗ وَاللّٰهُ بَصِيْرٌ ۢ بِمَا يَعْمَلُوْنَ ۝٩٦

அல்லாஹ்விடமுள்ள மறுமை இல்லம் இதர சமுதாயத்தினருக்கு அல்லாமல் (யூதர்களாகிய) உங்களுக்கே உரியது என்று நீங்கள் கூறுவதில் உண்மையாளர்களாக நீங்கள் இருந்தால் மரணமடைய ஆசைப்படுங்கள் (பார்க்கலாம்) என்று (நபியே) நீர் கூறுவீராக!

அவர்கள் தமது கரங்களால் (தீய செயல்களை) செய்துவிட்டதால் ஒருபோதும் அவர்கள் அதை விரும்ப மாட்டார்கள். அநியாயக்காரர்களைப் பற்றி அல்லாஹ் நன்கறிந்தவன்.

(இந்த உலகில் நீண்ட நாள்) வாழ வேண்டும் என்று இணை வைப்பவர்களும் இதர மக்களும் விரும்புவதை விட (அதன் மீது) அதிக மோகம் கொண்டவர்களாக அவர்களே (யூதர்களே) இருக்கிறார்கள் என்பதை (நபியே) நீர் காண்பீர். தமக்கு ஆயிரம் ஆண்டு ஆயுள் தரப்பட வேண்டுமென்று அவர்களில் ஒருவர் விரும்புவார். அவர் நீண்ட நாள் வாழ்வது அவரை தண்டனையிலிருந்து தூர விலக்கி வைத்து விடாது. அவர்கள் செய்பவற்றையெல்லாம் அல்லாஹ் நன்றாகவே பார்த்துக் கொண்டிருக்கிறான்.

அல்குர்ஆன் 2:94-96

**யூதர்களிடம்** நிலவி வந்த ஆதாரமற்ற தவறான கற்பனையொன்றை இந்த வசனங்கள் தவிடு பொடியாக்குகின்றன. அவர்களே வெட்கப்படும் அளவுக்கு அவர்களுக்கு முன் ஒரு கேள்வியை வைக்கின்றன.

ஒரு கோணத்தின்படி பார்த்தால் இணை வைப்பவர்களை விடவும் யூதர்கள் மட்ட மானவர்கள் என்பதையும் உணர்த்தி விட்டன.

இதோ யூதர்களின் ஆதாரமற்ற கற்ப னைகள்:

யூத மதத்திலோ கிறிஸ்தவ மதத்திலோ இருப்பவர்கள் மட்டுமே நேர்வழி பெற்றவர். காண்க: திருக்குர்ஆன் 2:135)

யூதர்களாகிய நாங்களே அல்லாஹ்வின் பிள்ளைகள். அவனின் அன்புக்குரியவர்கள். (காண்க: திருக்குர்ஆன் 5:18)

யூதர்களும் கிறிஸ்தவர்களும் மட்டுமே சொர்க்கம் செல்ல முடியும். (காண்க: குர்ஆன் 2:111)

ஒருவேளை நாங்கள் செய்த குற்றங் களுக்காக நாங்கள் நரகத்துக்குச் சென்றாலும் ஒரு சில நாட்கள் மட்டுமே நரகம் எங்களைத் தீண்டும்.(காண்க: திருக்குர்ஆன் 2:80)

என்றெல்லாம் யூதர்கள் கூறி வந்தனர்.

ஷஹீத் ஸய்யித் குதுப் (ரஹ்)அவர்கள் கூறுகின்றார்: யூதர்கள் இப்படியெல்லாம் கூறுவதற்கு முதல் நோக்கம் என்னவென்றால் முஸ்லிம்களின் மார்க்கப் பற்றை அசைத்துப் பார்த்துவிட வேண்டும் என்பதுதான். திருக் குர்ஆனும் அவர்களின் இறைத்தூதரும் அவர்களுக்கு (முஸ்லிம்களுக்கு) அளித்துள்ள வாக்குறுதிகள் மீது வைத்திருக்கும் உறுதியைக் குலைத்துவிட வேண்டும் என்பதுதான்.

திருக்குர்ஆனும் அவர்களின் இறைத் தூதரும் அவர்களுக்கு (முஸ்லிம்களுக்கு) அளித்துள்ள வாக்குறுதிகள் மீது வைத் திருக்கும் உறுதியைக் குலைத்துவிட வேண்டும் என்பதுதான்.

மறுமை நாள் எங்களுக்குரியதே என்று யூதர்கள் கூறுவதில் முஹம்மது நபியை ஏற்றுக் கொண்டிருக்கும் முஸ்லிம்களுக்கு மறுமையில் எந்த பாத்தியதையும் (உரிமையும்) கிடைக்காது என்ற கருத்து உள்ளடக்கமாகியிருக்கிறது. இப்படிக் கூறி முஸ்லிம்களின் மார்க்கப் பற்றை அசைத்துப் பார்ப்பதே யூதர்களின் முதல் லட்சியம்.

எனவே, அல்லாஹ் தன் தூதரிடம் 'யூதர்களை 'முபாஹலா'வுக்கு அழைப்பீராக' என்கிறான்.

முபாஹலா: இரு அணிகளும் (முஸ்லிம் களும் யூதர்களும்) தனித் தனியே ஓரிடத்தில் நின்று கொண்டு (எங்கள் வாதமே நியாய மானது.) இரு அணிகளில் பொய் கூறும் அணி எதுவோ அதன் மீது சாபம் இறங்கட்டுமாக! என்று அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்திட வேண்டும். (நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)

இந்த வசனம் யூதர்களைப் பார்த்து இப்படிக் கேட்கிறது. 'மறுமை நலன்கள் யாவும் உங்களுக்கு மட்டுமே கிடைக்கும். மற்ற சமுதாயத்துக்கு இதில் துளியளவும் பங்கில்லை என்று நீங்கள் நம்புவது உண்மையென்றால் இறைவனை உடனே சந்திக்க வேண்டுமென்று துடிக்க வேண்டுமல்லவா? சாவதற்கு எந்த நேரமும் தயாராக இருக்க வேண்டும் அல்லவா?

மிகவும் வலியைத் தருகின்ற ஒரு நரம்பைப் பிடித்து விட்டது குர்ஆன். இறை வனுக்குப் பிரியமானவர்களாகவும் இறை வனின் நெருக்கத்துக்கு உரியவர்களாகவும் இருக்கிறோம் என்ற அவர்களின் நினைப்பை சற்றே அசைக்கலாம். அவர்களுக்கு வெட்கம் வருகின்றதா என்று பார்க்கலாம் என்றே குர்ஆன் முயல்கிறது.

வேகமாக ஓடி வந்து இதற்கும் அவர்கள் பதில் சொல்லக் கூடும். அப்புறமென்ன? 'நாங்கள் சாவை எதிர்பார்க்கிறோம்' என்று அவர்கள் சொல்லக் கூடும். ஆனால், ஒரு சில விஷயங்களை என்ன பாடு பட்டாலும் மனிதனால் மறைக்க முடியாது. இந்த உண்மை யூதர்களுக்கு மிகவும் கசப்பாக இருந்தது. தங்களுடைய பார்வையிலேயே அவர்கள் கீழ்த்தரமாக ஆகிப் போனார்கள். (நூல்: ததப்புருல் குர்ஆன்)

### வசனம் 95– விளக்கம்

மறுமையில் இறை நெருக்கத்தையும் சுவனத்தையும் நாம்தான் பெறுவோம் என்று உறுதியாக நம்புகிற ஒரு சமுதாயம் வெகு விரைவாகவே அழியும். உலகத்திலிருந்து விடை பெற்று சுவனம் தரும் சுகங்களைப் பெற் றிடவே விரும்புவார்கள். இதுதான் யதார்த்தம்.

ஆனால், யூதர்களோ சுவனத்தின் சுக வாழ்வு எங்களுக்கே சொந்தம் என்று கூறிக் கொண்டிருந்தனரே தவிர, மரணத்தை

விரும்பவில்லை. அதற்குக் காரணம், அவர்கள் இறுதித் திருத்தூதரை ஏற்க மறுத்ததும், தீய செயல்களில் ஈடுபட்டதும்தான். அவர்களுக்கே நன்றாகத் தெரியும், 'நாம் மரணமடைந்து விட்டால் மறுமையில் நரகமே நமக்குக் கிடைக்கும்' என்று. அதனால் அவர்கள் மரண மடைய விரும்பவில்லை.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அப்பொழுது யூதர்கள் மரணமடைவதை விரும்பியிருந்தால் அவர்கள் (அனைவரும்) இறந்திருப்பார்கள். நரகத்திலுள்ள தமது தங்குமிடத்தையும் பார்த்திருப்பார்கள். (நூல்: குர்த்துபீ, இப்னுகதீர்)

'அவர்கள் மரணமடைவதை விரும்பவில்லை என்பது மட்டுமல்ல, மரணத்தை இனியும் விரும்பவே மாட்டார்கள்' என்றும் அல்லாஹ் கூறியுள்ளான். அப்படிப் பார்த்தால் இந்த வசனம் ஒரு முன்னறிவிப்பையும் கூறியுள்ளது என விளங்க முடிகிறது. அதாவது, 'யூதர்கள் மரணத்தைக் கண்டு அஞ்சும் கோழைகளே' என்பதுதான் அந்த முன்னறிவிப்பு.

ஏன் அவர்கள் மரணமடைந்திட விரும்புவதில்லை? இனியும் விரும்ப மாட்டார்கள்? என்பதற்கு 'அவர்கள் தம் கரங்களால் தீய செயல்களைச் செய்துவிட்டதால்' என்கிறது குர்ஆன்.

யூதர்கள் என்னென்ன பாவங்களைத் துணிச்சலாக செய்து வந்தார்கள் என்பது முன்னர் பல வசனங்களில் கூறப்பட்டுள்ளது.

அவர்கள் எந்த அளவுக்கு மட்டமானவர்களென்றால் தாம் செய்வது பாம்தான் என்று தெரிந்து கொண்டே பாவம் செய்தார்கள்.

இஸ்லாம், சத்திய மார்க்கம் தான் என்று கசடறத் தெரிந்திருந்தும், அதை ஏற்கவில்லை என்பது மட்டுமல்ல, ஏற்றுக் கொண்டவர்களை ஏகடியம் பேசினார்கள்.

முஸ்லிம்கள், எவ்வளவு நன்மை செய்திருந்தாலும் மறுமையில் அவர்களுக்கு ஒரு நன்மையும் கிடைக்கப் போவதில்லை. நாங்கள் (யூதர்கள்) பாவம் செய்திருந்தாலும் கூட எங்களுக்கு சொர்க்கம் கிடைத்துவிடும் என்று கூறிக் கொண்டிருந்தனர்.

இப்படியெல்லாம் பேசுவது அல்லாஹ்வுக்குச் செய்யும் துரோகம் என்பது இவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவேதான் 'மரணம்' என்றவுடன் அஞ்சி நடுங்கி ஓடி ஒளிகின்றனர்.

மேலும், இந்த வசனம் யூதர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பை வழங்கியுள்ளது. திருக்குர்ஆன் ஓர் இறைவேதமல்ல. முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இறைத்தூதரல்லர் என்று நிரூபித்திட ஒரு வாய்ப்பளிக்கிறது.

'அவர்கள் ஒருபோதும் மரணத்தை விரும்பவே மாட்டார்கள்' என்று திருக்குர்ஆன் கூறுகிறது. இதையே முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே, யூதர்கள் மரணத்தை விரும்பிவிட்டால், 'விரும்பவே மாட்டார்கள்' என்ற முன்னறிவிப்பு பொய்யாகி விடும்.

இதற்காகக் கூட யூதர்கள் மரணத்தை விரும்பியிருக்கலாம். ஆனால், விரும்ப வில்லை.

ஷஹீத் ஸய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார்: 'மரணமடைவதற்கு ஆசைப்படுங்கள் பார்க்கலாம்' என்ற அல்லாஹ்வின் சவாலை ஏற்கவில்லை யூதர்கள். ஏனெனில், அப்படி விரும்பியிருந்தால் அவர்கள் விரும்பியபடியே மரணம் வந்து உலக வாழ்வு முடிவுக்கு வந்துவிடும். இது அவர்களுக்கு ஒரு இழப்பு. தம் தீய செயல்களால் மறுமையிலும் அவர்கள் இழப்பையே அடைவார்கள். எனவே, அவர்கள் சவாலை ஏற்கவில்லை. (நூல்: ஃபீ ழிலாலில் குர்ஆன்)

**யூதர்கள் மரணத்தை விரும்புவதில்லை. ஒருபோதும் விரும்பவே மாட்டார்கள் என்பது மட்டுமல்லாமல், இந்த உலக வாழ்வின் மீது அதீத மோகம் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். பல்வேறு நம்பிக்கைகளோடும், பல்வேறு சூழ்நிலைகளிலும் வாழும் எல்லா மக்களை விடவும் யூதர்களே உலக வாழ்க்கை மீது பேராசை கொண்டவர்களாக இருக்கின்றனர்;**

**வசனம் 96 விளக்கம்**

யூதர்கள் மரணத்தை விரும்புவதில்லை. ஒருபோதும் விரும்பவே மாட்டார்கள் என்பது மட்டுமல்லாமல், இந்த உலக வாழ்வின் மீது அதீத மோகம் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர்.

பல்வேறு நம்பிக்கைகளோடும், பல்வேறு சூழ்நிலைகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எல்லா மக்களை விடவும் யூதர்களே உலக வாழ்க்கை மீது பேராசை கொண்டவர்களாக இருக்கின்றனர்; இருப்பதாகக் கருத வாய்ப் புண்டு.

ஆனால், வேதங்கள் (தவ்ராத், இன்ஜீல், ஸபூர் ஆகிய மூன்று வேதங்களும் யூதர் களுக்கே வழங்கப்பட்டிருந்தன) வழங்கப் பட்ட ஒரு சமுதாயம், பல இறைத்தூதர்களின் வழிகாட்டுதலைப் பெற்ற ஒரு சமுதாயம் நாங்களே நேர்வழியும் இறையன்பும் பெற்ற வர்கள் என்று கூறும் ஒரு சமுதாயம் நீண்ட நாள் உலகில் வாழ்ந்திட பேராசைப்படுவது ஏன்?

இணை வைப்பவர்கள் இயல்பாகவே சித்தாந்த ரீதியாகவும், சிந்தனை ரீதியாகவும், குழப்பமானவர்கள். பலவீனமானவர்கள். இவர்களை விட அதிகமான பேராசை யூதர்களுக்கு உலக வாழ்க்கை மீது.

ஷஹீத் ஸய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார்: இந்த யூதர்கள் இப்படித்தான். அக்கால யூதர்களும் இக்கால யூதர்களும் வருங்கால யூதர்களும் அனைவரும் இந்த எண்ணத்தில் ஒரே மாதிரிதான் இருக்கின்றனர்.

அவர்களை ஓங்கித் தாக்கும் (எதிர் கேள்வி) ஒன்று வராத நேரங்களில்தான் தலைநிமிர்ந்து நிற்பார்கள். ஓங்கித் தாக்கும் (கேள்வி) வந்துவிட்டால் தம் தலைகளைத் தொங்கப் போட்டுக் கொள்வார்கள். உலக வாழ்க்கை மீதான மோகம் கோழைத் தனம்இவற்றின் காரணமாக அவர்களின் நெற்றி தாழ்ந்து விடுகின்றது.

அவர்களில் ஒருவன் ஆயிரம் ஆண்டுகள் உலகில் வாழ்ந்திட வேண்டும் என்று விரும்புகின்றான். அல்லாஹ்வைச் சந்திக்க அவர்கள் விரும்புவதில்லை. இவ்வுலக வாழ்க் கையன்றி வேறொரு வாழ்க்கை இருப்பதை உணர்வதுமில்லை. (ஃபீழிலாலில் குர்ஆன்)


நீண்ட நாள் வாழ்ந்திட வேண்டும் என்று யூதர்கள் பேராசைப்படுவதற்குக் காரணம் மரணத்தின் பின்னே வரும் மறுமையின் தண்டனையிலிருந்து தப்பிக்கவும், அதைத் தள்ளிப் போடவும்தான்.

இது சிறுபிள்ளைத்தனமான கற்பனை; தவறான கற்பனை. மறுமையின் தண்டனை யிலிருந்து தப்பிக்க ஒரே வழிதான் உண்டு. இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வது ஒன்றுதான் அந்த வழி.

நீண்ட நாள் வாழ்வது அவர்களைத் தண்டனையிலிருந்து தூர விலக்கி வைத்து விடுவதில்லை. அவர்கள் செய்பவற்றை அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று முடிகிறது இவ்வசனம்.

இது ஒரு கனமான எச்சரிக்கை. மேலும், இந்த மூன்று வசனங்களும் யூதர்களின் தவறான எண்ணங்களைத் தவிடு பொடியாக்கி அவர்கள் கூறும் பொய்யை அவர்களே உணர்ந்து வெட்கப்படும்படிச் செய்கின்றன.

தொடரும் இன்ஷா அல்லாஹ்....




முஸ்லிம்களின் வீழ்ச்சியால்
உலகம் இழந்ததென்ன?

# முஸ்லிம் தலைவர்களின் தனிச்சிறப்புகள்

28

மொழிபெயர்ப்பு
**அஹ்மது ஜலாலுதீன் நத்வி**

**முஸ்லிம்க** வெளியே வந்தார்கள். அரபுலகம் என்ற வட்டத்துக்கு வெளியே உலகத்துக்கு தலைமையேற்றார்கள்.

அதுவரை உலகத் தலைமையை ஏற்றிருந்த சமூகங்கள் தம் சுயநலத்துக்கே பயன்படுத்திக் கொண்டன தம் தலைமையை. அவை தலைமைப் பண்புக்கு ஏற்றபடி நடந்திடவில்லை. செயல்படவில்லை. அதனைக் களங்கப்படுத்தி விட்டன. எனவே, நோய் பிடித்த அந்த சமூகங்களை தலைமைப் பதவியிலிருந்து அகற்றினர் முஸ்லிம்கள்.

தகுதியற்றவர்களை அகற்றிவிட்டு உலகத் தலைமையை ஏற்ற முஸ்லிம்கள் மனித இனத்தை நிதானத்தோடும் தெளிவோடும் சமநீதியோடும் வழிநடத்தினர்.

இந்த முஸ்லிம்களிடம் தலைமைப் பண்பின் எல்லாத் தகுதிகளும் ஒருங்கே அமையப் பெற்றிருந்தன. எனவே, முஸ்லிம்களின் தலைமையின் கீழ் உலகம் உய்வுற்றது. ஏற்றமடைந்தது. முஸ்லிம்களின் நிழலில் உலகம் இளைப்பாறியது.

இஸ்லாமியத் தலைமை உலகை வழி நடத்திய காலகட்டத்திலிருந்த முஸ்லிம் தலைவர்களின் நற்பண்புகள்.

முதலாவது: இறைவன் வகுத்தளித்த உன்னத வாழ்க்கை நெறி இறைவன் இறக்கியருளிய உயர் வேதம் இவைதான் அவர்களின் நெறி வழி.

தம் மனம் போன போக்கில் சட்டங்களை வகுத்து இதுதான் வாழ்க்கை நெறி என்று கூறிடவில்லை அவர்கள். ஏனெனில், மனிதன் தனக்கென தானே சட்டங்களை வடிப்பது தான் அக்கிரமம். தவறுகள், அறியாமை ஆகியவற்றின் ஊற்றுக் கண்.

எனவே, முஸ்லிம்கள் இந்தத் தவறை ஒருபோதும் செய்யவில்லை. தம்முடைய நடத்தை அரசியல், சமூகத் தொடர்பு, இவற்றுள் எதிலும் முஸ்லிம்கள் மனம் போன போக்கில் அலட்சியமாக நடந்திடவில்லை.

அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய இறை வேதம் எனும் ஒளியைக் கொண்டே மக்களிடம் அவர்கள் நடந்தார்கள். அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய 'ஷரீஅத்' எனும் வாழ்க்கை நெறியின் தீர்ப்பையே மக்களிடம் அவர்கள் செயல்படுத்தினார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: மரணமடைந்து விட்ட ஒருவனுக்கு நாம் உயிரூட்டி மக்கள் மத்தியில் அவன் நடந்திட அவனுக்கு ஒளியும் தந்தோமே அவன் (குஃப்ர் எனும்) இருள்களில் சிக்கி வெளியேற முடியாமலாகி விட்டவனுக்குச் சமமா? (அல்குர்ஆன் 6:122)

மேலும் கூறுகிறான்: ஓரிறை நம்பிக்கையாளர்களே! நீதியை நிலைநாட்டுவதில் அல்லாஹ்வுக்காக நீங்கள் உறுதியான சாட்சிகளாகத் திகழுங்கள். ஒரு கூட்டத்தின் மீதான வெறுப்பு உங்களை அநீதி செய்திடும்படித் தூண்டிவிட வேண்டாம். நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுவே, இறையச்சத்துக்கு மிக நெருக்கமானது. நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நிச்சயமாக நன்கறிந்தவன். (அல்குர்ஆன் 5:8)

இறைவனின் இப்படிப்பட்ட வழிகாட்டுதல்களால் அவர்கள் இறைச்சட்டங்களின் படியே மக்களை வழிநடத்தினார்கள். அனைவரையும் பாரபட்சமின்றி நடத்தினார்கள்.

இரண்டாவது: பண்டைய காலத்திலும் சரி, இப்போதும் சரி, மக்களை வழிநடத்திடும் பொறுப்புக்கு வருவோர், மனஒழுக்கப் பயிற்சியும், பண்பாட்டுப் பயிற்சியும் பெறாமலேயே அதிகாரத்துக்கு வந்துவிடுகின்றனர். பொதுமக்களும் கூட இப்படித்தான்.

ஆனால், இதற்கெல்லாம் மாறாக, அப்பொழுது உலகத் தலைமையை ஏற்ற முஸ்லிம்கள் நீண்ட நெடுங்காலம் பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களின் நேரடிப் பயிற்சியின் கீழ் இருந்தார்கள். அண்ணலாரின் அணுக்கமான கண்காணிப்பின் கீழ் இருந்தார்கள். அவர்களை நபி (ஸல்) அவர்கள் செப்பனிட்டார்கள்; சீரமைத்தார்கள். பண்படுத்தினார்கள்.

பிறர் பொருள் நோக்காமை, அடக்கம், கற்பொழுக்கம், நம்பகத் தன்மை, பிறர் நலம் பேணுதல், இறையச்சம் ஆகிய நற்பண்புகளை விதைத்தார்கள் நபி (ஸல்) அவர்கள்.

பதவி மோகம் அதிகார வெறி போன்ற தீய பண்புகள் அவர்களை அண்ட விடாமல் தடுத்தார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை இப்படிச் சொன்னார்கள்: "பதவி மீது மோகம் கொண்டவருக்கோ, பதவியைக் கேட்டவருக்கோ நிச்சயமாக நாம் அதைத் தரமாட்டோம்." (நூல்: புஹாரி, முஸ்லிம்)

அல்லாஹ் கூறுகிறான்: "பூமியில் வரம்பு மீறவோ குழப்பம் செய்யவோ, விரும்பாதவர்களுக்கே நாம் மறுமை வீட்டை வழங்குவோம்." (அல்குர்ஆன் 28:83)

இந்த வழிகாட்டுதல் அவர்களின் செவிப் பறைகளைத் தட்டிக் கொண்டேயிருந்தன. இதனால் அவர்கள் (மற்ற சமுதாயங்களைப் போல) அரசுப் பதவிகளையும் அதிகாரப் பொறுப்புகளையும் பெற்றிட 'வெளிச்சத்தில் விழும் விட்டில் பூச்சிகளாய்' போய் விழவில்லை.

மாறாக, பதவிகள் தேடி வந்தபொழுது கூட அதைத் தட்டிக் கழித்தார்கள். அரசுப் பதவியிலிருப்பதை ஒரு குறையாகவே கருதினார்கள்.

இப்படிப்பட்ட பண்பாளர்கள் ஆட்சி அதிகாரத்தை அடைய விரும்பி, தம்மை யோக்கிய சிகாமணியாகச் சித்தரித்துக் காட்டி, அதற்கென பணங்களை வாறி இறைத்துப் பிரச்சாரம் செய்பவர்களாக எப்படி மாற முடியும் அவர்கள்?

(ஜனநாயகத்தில் நடக்கும் இதுபோன்ற கேலிக் கூத்துகள் எதையும் அவர்கள் செய்திடவில்லை.) அரசுப் பொறுப்பில் ஏதேனுமொன்றை அவர்கள் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டால் சுருட்டக் கிடைத்த கொள்ளைப் பொருளாகவோ, உண்ணக் கிடைத்த உணவாகவோ அல்லது (இறைவழியில்) தாம் பட்ட சிரமங்களுக்கான கூலியாகவோ செய்த செலவுக்கான வருமானமாகவோ, அதை அவர்கள் கருதவில்லை.

மாறாக, தம் கழுத்தில் வைக்கப்பட்ட பெரும் தடையாக, அல்லாஹ் வைத்த சோதனையாக நினைத்தார்கள்.

தாம் மறுமையில் அல்லாஹ்விற்கு முன்னால் நிறுத்தப்படுவோம். அங்கே தாம் செய்த சின்னஞ்சிறிய செயல்களுக்கும் பென்னம் பெரிய பணிகளுக்கும் விசாரிக்கப் படுவோம் என நம்பிச் செயல்பட்டனர்.

அல்லாஹ் கூறுகிறான்: "உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களை உரியவர்களிடம் ஒப்படைத்திடவும் நீதியுடன் நீங்கள் தீர்ப்பளித்திடவும் அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான்." (அல்குர்ஆன் 4:58)

அவன்தான் உங்களை பூமியில் (தன்) பிரதிநிதியாக்கினான். உங்களில் சிலரை விட சிலருக்குப் பல உயர்வுகளை வழங்கினான். உங்களுக்கு வழங்கியவற்றில் உங்களைச் சோதிக்கவே (இவ்வாறு செய்தான்). (6:165)

இந்த இறையுபதேசங்களை என்றென்றும் இதயத்தில் ஏந்திச் செயல்பட்டனர் அவர்கள்.

மூன்றாவது: இனம், குழுக்கள், பிராந்தியம் ஆகிய வேறுபாடுகளைக் கடந்து மொத்த மனித இனத்தின் நலனையும் கருத்தில் கொண்டு அவர்கள் உழைத்தனர்.

ஒரு இனத்தின் நலனோ, ஏற்றமோ அவர்களுக்கு முக்கியமில்லை. ஒரு இனம் ஆளப் பிறந்தது. மற்ற இனங்கள் ஆளப்படுவதற்காகப் பிறந்தவை என்று கருதவில்லை.

தம் நாடும் தம் இனமும் தான் ஏற்றமானவை. மற்றவை தாழ்ந்தவை என்றும் கருதவில்லை.

ரோம, பாரசீக மன்னராட்சியிலிருந்து அரேபிய மன்னராட்சியின் கீழ் மக்களைக் கொண்டு வந்திட வேண்டும் என்றோ, அரேபிய சாம்ராஜ்யத்தை நிறுவி அதன் நிழலில் ஆடம்பரப் பெருவாழ்வு வாழ்ந்திட வேண்டும் என்றோ தம்முடைய அரசின் பாதுகாப்பு வளையத்துக்குள் பெருமை மிக்கதோர் வாழ்வு வாழ்ந்திட வேண்டும் என்றோ முஸ்லிம்கள் கருதவில்லை.

மாறாக, மனிதனை மனிதனே அடிமைப் படுத்திடும் அவலத்திலிருந்து ‘அல்லாஹ் வுக்கே மனிதன் அடிமை’ என்று மன்னனின் அவையில் முஸ்லிம்களின் தூதராகச் சென்ற ரிப்ஈ இப்னு ஆமிர் (ரலி) கூறியது போல, “மனிதனுக்கு மனிதன் அடிமை என்ற நிலையை மாற்றி அல்லாஹ்வுக்கு மட்டுமே மனிதன் அடிமை என்ற நிலையை ஏற்படுத் திடவும் உலகத்தின் நெருக்கடிகளிலிருந்து அதன் தாராளத்தை நோக்கி மனிதனை உயர்த்தவும், மனிதக் கோட்பாடுகள் மனிதனுக்குச் செய்திடும் அநீதிகளிலிருந்து மனிதனை மீட்டு இஸ்லாத்தைத் தரும் நீதியை நோக்கி மனிதனைக் கொண்டு வரவுமே அல்லாஹ் எங்களை அனுப்பினான்.” (நூல்: அல் பிதாயா வன் நிஹாயா,) இப்படி இருந்தது அவர்களின் பணிகள்.

இந்த முஸ்லிம் ஆட்சியாளர்களைப் பொருத்தவரை ‘மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வு ஏதுமில்லை. அனைவரும் சமமே. மனிதர்கள் அனைவரும் ஆதம் (அலை) அவர் களின் பிள்ளைகளே! அவர் மண்ணிலிருந்து படைக்கப்பட்டார்.

தக்வா எனும் இறையச்சத்தைக் கொண்டு அல்லாமல் அரபு மொழி பேசுபவனை விட வேறு மொழி பேசுபவரோ, வேறு மொழி பேசுபவரை விட அரபு மொழி பேசுவபரோ உயர்ந்தவரல்லர்.

அல்லாஹ் கூறுகிறான்: “மக்களே! உங்களை நாம் ஒரு ஆண், ஒரு பெண்ணி லிருந்து படைத்தோம். நீங்கள் பரஸ்பரம் அறிமுகமாகிக் கொள்வதற்காக உங்களை நாம் பல கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களின் பயபக்தி மிக்கவரே அல்லாஹ்விடத்தில் மிக்க மரியாதைக்குரிய வராவார்.(49:13)

இதுவே உலகை வழிநடத்திய இஸ்லா மியத் தலைமையின் கொள்கையாக கோட் பாடாக இருந்தது.

இஸ்லாம் ஏற்படுத்திய இந்த சமநீதியை இஸ்லாமியத் தலைமை எப்படிக் கட்டிக் காத்தது என்பதற்கு வரலாறு கூறும் ஓர் உதாரணம் இதோ!

எகிப்து, பரந்து விரிந்த இஸ்லாமிய அரசின் ஒரு மாகாணம். அதன் கவர்னர் அம்ரு பின் ஆஸ் (ரழி) எகிப்தின் குடிமகன் ஒருவரை கவர்னரின் மகன்.(ஏதோ ஒரு காரணத்திற்காக) அடித்து விட்டார். அடிக்கும் போது தமது பாரம்பரியப் பெருமையை நினைவுகூரும் வகையில் இப்படிச் சொன்னாராம். “மாண்பு மிக்க தலைமுறையில் வந்த என்னிடமிருந்து இந்த அடியைப் பெற்றுக் கொள்” என்று சொல்லி அடித்தார்.

இஸ்லாமிய அரசின் தலைவர் கலீஃபா உமர் (ரலி) அவர்களுக்கு இந்தத் தகவல் கிடைத்தது. அந்த எகிப்து குடிமகன் கவர்னரின் மகனைத் திருப்பி அடித்திட வேண்டும் என கலீஃபா உத்தரவிட்டார். (அடிவாங்கிய கவர்னரின் மகனையும் அதைப் பார்த்துக் கொண்டிருந்த கவர்னர் அம்ரு பின் ஆஸ் (ரலி) அவர்களையும் பார்த்து) இப்படிச் சொன்னார் கலீஃபா உமர் (ரலி) அவர்கள்: “இந்தக் குடி மக்களையெல்லாம் அவர்கள் தாய்மார்கள் சுதந்திரமானவர்களாகவே பெற்றெடுத்திருக்க, எப்போது நீங்களெல்லாம் அவர்களை அடிமைகளாக நடத்த ஆரம்பித்தீர்கள்?”

**உலகளாவிய இஸ்லாமிய அரசு நிலை கொண்டிருந்த காலத்தில் இந்த சமுதாயத்தி லிருந்து தன்னிகரற்ற தலைவர்களும் நீதியான ஆட்சியாளர்களும் அருமையான அமைச்சர் பெருமக்களும் மேன்மை மிக்க ஆளுமைகளும் வெளிப் போந்தனர். இந்த நீள் நிலத்தின் நட்சத்திரங்களாக மனித இனத்தின் அற்புதங்களாக, இந்த உலகத்துக்கே பொலிவு ஏற்றுபவர்களாக இவர்கள் திகழ்ந்தனர்.**

*(நூல்: இப்னுல் ஜவ்சீ எழுதிய தாரிக் உமர் பின் கத்தாப்)*

இப்படி நிலைநாட்டினார்கள் இஸ்லாம் தந்த சமநீதியை.

அது மாத்திரமன்று, தம்முடைய (தீன்) இஸ்லாம் எனும் அழகிய வாழ்க்கை நெறி, அறிவுஞானம், பண்பாடு இவற்றையெல்லாம் தகக்குரியதே. இதை யாருக்கும் கற்றுத் தந்திட மாட்டோம் என்று கருமித்தனம் செய்ய வில்லை அந்த முஸ்லிம்கள்.

இன, மொழி, பிராந்திய வேறுபாடுகள் ஏதுமின்றி, ஆட்சியதிகாரத்தை அனை வருக்கும் பொதுவென நடத்தினார்கள்.

எல்லா நாடுகளிலும் வாழும் எல்லா மக்களுக்கும் பொதுவானவையாகத் திகழும் மேகங்கள் போல் அனைவருக்கும் பயன் பட்டார்கள்.

வான்மழை பூமியின் மீது பாரபட்சம் காட்டுவதில்லை. காடுகள் ஊர்கள் எல்லா நிலப்பரப்பு மீதும் ஒரே மாதிரிதான் பொழி கிறது. அது போல் இவர்களும் பொது வெனவே வாழ்ந்தனர். மக்கள் அவரவர் தாம் ஏற்றுக் கொண்டதற்கு ஏற்ப பலன்களைப் பெற்றார்கள் இவர்களிடமிருந்து.

இப்படிப்பட்ட முஸ்லிம்களின் நிழலில் இவர்களுடைய ஆட்சியின் கீழ் இதர சமுதா யங்கள், குறிப்பாகச் சொன்னால், முன்னொரு காலத்தில் ஒடுக்கப்பட்டவர்களாய் வாழ்ந் தவர்கள் கூட எல்லாமும் பெற்று பெரு வாழ்வு வாழ்ந்தார்கள்.

தீன் எனும் வாழ்க்கை நெறி, மார்க்க அறிவு, கலாச்சாரப் பண்பாடு, அதிகாரம் (அரசுப் பதவி) என அனைத்தையும் அரபுக் களல்லாத ஏனையோர் பெற்றார்கள். இது மாத்திரமல்ல. நவீன உலகைக் கட்டமைப் பதில் அரபுக்களோடு போட்டி போட்டுக் கொண்டு நின்றார்கள். இது மட்டுமல்ல, சில துறைகளில் அரபுக்களை விட முன்னே நின்றார்கள் பிற இனத்திலுள்ள பிரமுகர்கள்.

ஆம்! அரபுக்களிடமிருந்து கற்ற பிற இனத்தவர்கள் சில துறைகளில் அரபுக் களையே விஞ்சி வாகை சூடினார்கள். இஸ்லாமிய அரசு அவர்களுக்கு அமைத்துத் தந்த வாய்ப்புகளை வாகாய்ப் பயன்படுத்தி வென்றார்கள்.

அரபுக்கள் உருவாக்கிய, கற்பித்த பல கலைகளின் மணிமகுடமாக காலப்போக்கில் அரபுக்கல்லாதோர் உயர்ந்தார்கள். மார்க்க அறிஞர்கள், சட்டத்துறையில் வல்லுநர்கள், நபிமொழித்துறை நிபுணர்கள் என முஸ்லிம் சமுதாயத்துக்கே தலைமையேற்போர் அரபுக் களல்லாதோர் என்றானார்கள்.

வரலாற்றாசிரியர் இப்னு கல்தூன் வியந்து கூறுவதைப் பாருங்கள்: “வியப்புக்குரியதோர் யதார்த்தம் என்னவென்றால், கல்வியின் காவலர்களாக இஸ்லாமிய சமுதாயத்தில் இருந்தோருள் பலர் அரபுக்கள் அல்லா தோர்தான். மார்க்கம் சார்ந்த துறைகளில் மட்டுமல்ல, அறிவுசார் துறைகளிலும் இது தான் நிலை. அரிதாக ஒரு சில துறைகளில் அரபுக்களின் பாரம்பரியத்தின் வழிவந்த சில அறிஞர்கள் முதலிடம் பெற்றிருந்தாலும் கூட அவர் அரபுமொழியல்லாத அந்நிய மொழி பேசுபவராகவே இருந்தார்.

அவரை அத்துறையில் வல்லுநராக உருவாக்கியவரும் அவரின் ஆசிரியரும் அரபுக் களல்லாதவர்களாகவே இருந்தனர். ஆனால், இந்த மார்க்கமோ, அரபுக்களிடம்தான் தோன்றியது. இதனை உருவாக்கிய இறைத் தூதரும் ஓர் அரேபியரே. இதுதான் வியப்புக் குரிய உண்மை.

*(நூல்: அல்முகத்திமா, இப்னு கல்தூன் பக்.499)*

உலகளாவிய இஸ்லாமிய அரசு நிலை கொண்டிருந்த காலத்தில் இந்த சமுதாயத்தி லிருந்து தன்னிகரற்ற தலைவர்களும் நீதியான ஆட்சியாளர்களும் அருமையான அமைச்சர் பெருமக்களும் மேன்மை மிக்க ஆளுமைகளும் வெளிப் போந்தனர்.

இந்த நீள் நிலத்தின் நட்சத்திங்களாக மனித இனத்தின் அற்புதங்களாக, இந்த உலகத்துக்கே பொலிவு ஏற்றுபவர்களாக இவர்கள் திகழ்ந்தனர்.

தம்முடைய தனித்தன்மை, ஆண்மைத்திறன், கம்பீரம், மார்க்கப் பற்று, செயல் வலிமை இவற்றால் அவர்கள் உயர்ந்து நின்றார்கள்.

இப்படி வெளிப் போந்த மாமனிதர்களின் எண்ணிக்கை அளவிட முடியாதது. அல்லாஹ் வைத் தவிர வேறெவர்க்கும் இந்தக் கணக்கு தெரியாது.


**தொடரும்...**

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**

# இடைக்காலப் பணியை விட

# நிரந்தரப் பணிக்கே முதலிடம்

தொடர் – 20



டாக்டர் யூசுப் அல் கர்ளாவி

நாம் செய்யும் நற்செயல்கள் அனைத்தும் ஒரே தரமானவை அல்ல. சிறந்தவை, மிகச் சிறந்தவை, அல்லாஹ்விற்குப் பிடித்தமானவை, மிகப் பிடித்தமானவை எனப் பல தரங்கள் உண்டு.

அல்லாஹ் கூறுவதைப் பாருங்கள்:

ஹாஜிகளுக்கு தண்ணீர் புகட்டும் பணியை (செய்பவர்களை)யும் கஅபா எனும் புனிதப் பள்ளிவாசலை நிர்வகித்திடும் பணியை (செய்பவர்களை)யும் நீங்கள் அல்லாஹ்வின் மீதும் இறுதிநாளின் மீதும் நம்பிக்கை கொண்டு அல்லாஹ்வின் பாதையில் அறப் போர் புரிந்தோருக்குச் சமமாக ஆக்கிவிட்டீர்களா? அல்லாஹ்விடத்தில் இவர்கள் (இருவரும்) சமமாக மாட்டார்கள். அநியாயக்காரர்களை அல்லாஹ் நேர்வழியில் செலுத்த மாட்டான். (9:19)

யார் ஓரிறை நம்பிக்கை கொண்டு தம் நாட்டை விட்டும் வெளியேறி தம் செல்வங்களையும் உயிர்களையும் தியாகம் செய்து அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்தார்களோ அவர்கள் அல்லாஹ்விடம் மகத்தான பதவி பெறுவார்கள். அவர்களே வெற்றியாளர்கள். (9:20)

எல்லா நன்மைகளும் ஒரே தரமானவை அல்ல. அவற்றுக்கிடையே ஏற்றத் தாழ்வுகள் உண்டு என்பதை இந்த வசனங்கள் தெளிவுபடுத்தியுள்ளன.

இதே கருத்தை வலியுறுத்தும் ஒரு நபிமொழி இதோ:

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஈமான் எனும் இறைநம்பிக்கை அறுபதுக்கும் மேற்பட்ட (அல்லது) எழுபதுக்கும் மேற்பட்ட கிளைகள் கொண்டது. அவற்றுள் மிக உயர்ந்தது 'வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை' என்ற ஏகத்துவ முழக்கமாகும். அவற்றுள் மிகத் தாழ்ந்தது பாதையில் கிடக்கும் தொல்லை தரும் பொருட்களை அகற்றுவதாகும்." (நூல்: புகாரி)

இந்த நபிமொழி நமக்கு உணர்த்துவது என்ன? ஈமானின் எல்லாக் கிளைகளும் ஒரே தரமானவை அல்ல. தரத்திலும் மதிப்பிலும் அவற்றுக்கிடையே ஏற்றத் தாழ்வுகள் உண்டு.

இந்த ஏற்றத்தாழ்வுகள் ஒப்புக்காகவோ காரணமின்றி வீணாகவோ வைக்கப்படவில்லை. சில காரணங்கள் அளவுகோல்கள் அடிப்படைகள் இவற்றால் உருவானதே இந்த ஏற்றத்தாழ்வு. அது என்ன அளவுகோல்? எந்த அளவுகோலின் கீழ் இந்த ஏற்றத்தாழ்வு நிர்ணயிக்கப்படுகிறது என்பதை இப்போது பார்ப்போம்.

**இடைவிடாமல் தொடராக....**

எந்தப் பணியைச் செய்தாலும் நிரந்தரமாக இடைவிடாமல் செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

இதன் பொருள் : எப்போதாவது ஓரிரு தடவை, அப்பொழுதொன்று இப்பொழுதொன்று என்றில்லாமல் தொடர்ச்சியாய் செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நிரந்தரமாக செய்யப்படும் பணிகளே அல்லாஹ்வுக்கு மிகவும் பிடிக்கும் அப்பணிகள் குறைவாக இருப்பினும் சரியே." (புகாரி, முஸ்லிம்)

மஸ்ரூக் (ரஹ்) கூறினார்கள்: "நான் அன்னை ஆயிஷா (ரலி)விடம், 'எம்மாதிரியான பணிகளை நபி (ஸல்) மிகவும் விரும்புவார்கள்?" என்று கேட்டேன். அதற்கு 'நிரந்தரமாகச் செய்யப்படும் பணிகள்தான் நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் பிடிக்கும்' என்று கூறினார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

ஒரு முறை அன்னை ஆயிஷா (ரலி) அவர்களின் இல்லத்துக்கு நபி (ஸல்) அவர்கள் சென்றார்கள். அப்பொழுது அங்கே ஒரு பெண்மணி இருந்தார். "யார் இந்தப் பெண்?" என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு 'மிக அதிகமாகத் தொழுபவர்' என்று பேரெடுத்த பெண்மணி இவர்' என்று ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அதற்கு, "நிறுத்து ஆயிஷா! உங்களால் முடிந்த அளவுக்கு வழிபாடுகளைச் செய்து வாருங்கள். அல்லாஹ் மீது சத்தியமாகச் சொல்கிறேன். நீங்கள் (அதிகமான வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு) தளர்ந்து போகும் வரை அல்லாஹ்வும (நற்கூலி வழங்குவதை) நிறுத்துவதில்லை" என்று கூறி நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நற்செயல்கள் குறைவாக இருப்பினும் கூட அவற்றை இடைவிடாமல் தொடர்ச்சி யாகச் செய்து வருவதே இறைவழிபாட்டில் நிலைத்திருப்பதற்கு வழி வகுக்கிறது. இதில் தான் ஏராளமான அருள்வளங்களும் உள்ளன.

ஒரு சிறிய செயலை இடைவிடாமல் செய்து கெண்டேயிருந்தால் இது நாளடைவில் அதிகமாக ஆகிவிடும். அவ்வப்போது செய்யப் படும் அதிகமான நன்மைகளை விட பல மடங்கு அதிகமாகி விடுவதும் உண்டு.

ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் ஒரே வீச்சில், ஏராளமான நன்மைகளைச் செய்து விட முனைவதை விட ஒரு நற்செயலை ஒரே அளவில் அன்றாடம் இடைவிடாமல் செய்து வருவதே ஏற்றமானது. விட்டு விட்டு எப்போ தாவது செய்யப்படும் ஏராளமான நற்செயல் களை விட இடைவிடாமல் தொடர்ச்சியாக செய்யப்படும் குறைவான நற்செயல்களே ஏற்றமானது. மார்க்கப் பணிகளில் மட்டுமல்ல. எல்லாக் காரியங்களிலும் மனித சுபாவத்துக்கு ஏற்ற வழி இதுவே.

மார்க்கப் பணிகளில் கடும் சிரமப்பட்டு ஈடுபடுவதையும் வரம்பு மீறுவதையும் நபி (ஸல்) அவர்கள் கண்டித்தார்கள்.

ஏனெனில், கடும் சிரமமான பணிகளை தன் மீது தானே சுமத்திக் கொள்பவர் ஒரு கட்டத்தில் சோர்வடைந்து போகக் கூடும். அல்லது அவரும் மனிதர்தானே. எல்லா மனித னுக்கும் உடல் பலவீனம் அடையுமல்லவா? அப்போது அவரால் முன்பு போல இயங்க முடியாமல் போய்விடுமே. அப்போது அவர் என்ன செய்வார். எடுத்துக் கொண்ட பணியை நிறைவு செய்யாமல் இடையிலேயே விட்டு விடுவார்.

எனவேதான் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்கள் சக்திக்குட்பட்ட பணி களையே செய்து கொண்டிருங்கள். நீங்கள் செயல்பட்டு சோர்ந்து போகும் வரை அல்லாஹ் நற்கூலி வழங்குவதை நிறுத்துவதில்லை. (நூல்: புகாரி)

மேலும், சொன்னார்கள் நபி (ஸல்) அவர்கள்: நடுநிலையான வழியைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், இந்த மார்க்கத்தை யாரேனும் தன் மீதுதானே கடுமையாக்கிக் கொண்டால் அது அவரை மிகைத்து விடும். (நூல்: அஹ்மது, ஹாகிம், பைஹகீ, அறிவிப்பாளர்: புரைதா (ரலி)

இந்தப் பொன்னரிய சொல்லை எப்போது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்றால், புரைதா (ரலி) என்ற நபித் தோழர் கூறுகின்றார்.

ஒரு நாள் என்னுடைய ஒரு தேவைக்காக நான் வீட்டை விட்டு, வெளியே வந்தேன். அங்கே அப்பொழுது எனக்கு முன் நபி (ஸல்) அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்ததும் என் கையை நபி (ஸல்) அவர்கள் பிடித்தார்கள். நாங்கள் இருவரும்

**இடையிடையே விட்டு விட்டு எப்பொழு தாவது சில தடவைகள் செய்யப்படும் ஏராளமான நற்செய்ல்களை விட இடை விடாமல் நிரந்தரமாக செய்யப்படும் பணிகளே சிறந்தவை. அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் மிகப் பிடித்தவை. அவை குறைவாக இருப் பினும் சரியே.**

ஒன்றாக நடந்து சென்று கொண்டிருந்தோம். அப்பொழுது நாங்கள் எங்களுக்கு முன்னால் தொழுது கொண்டிருக்கக் கூடிய ஒரு மனிதரைக் கண்டோம்.

அவர் நீண்ட நேரம் தொழுகையில் குனிந்து (ருகூவு செய்து) கொண்டிருந்தார். நீண்ட நேரம் ஸஜ்தா எனும் சிரவணக்கத்தில் இருந்தார். அதைக் கண்ட பெருமானார் (ஸல்) என்னிடம் "இவர் பிறர் மெச்சும் நோக்கத்துக் காக,முகஸ்துதிக்காக இப்படிச் செய்கிறார் என்று நீர் எண்ணுகிறீரா?" என்று கேட்டார்கள். அதற்கு நான் "அல்லாஹ்வும் அவனின் திருத் தூதருமே இது பற்றி நன்கறிந்தவர்கள்" என்று கூறினேன்.

உடனே நபி (ஸல்) அவர்கள் தன் கையை என் கையிலிருந்து விடுவித்துக் கொண்டு தன்னிரு கைகளையும் ஒன்றாக இணைத்து அவற்றை நேராக வைத்துக் கொண்டு மேலே உயர்த்திக் கொண்டு சொன்னார்கள்: "நீங்கள் நடுநிலையான வழியைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், இந்த மார்க்கத்தை தன் மீது யாரேனும் கடுமையாக்கிக் கொண்டால் அது அவரை மிகைத்துவிடும்." (நூல்: அஹ்மது, ஹைசமீ)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களை நீங்களே சிரமப்படுத்திக் கொள்ளா தீர்கள். தம்மைத் தாமே சிரமப்படுத்திக் கொண்டதால்தான் உங்களுக்கு முன் வாழ்ந்த சமுதாயத்தினர் அழிந்தனர். அவர்களில் மிஞ்சி யவர்களைத்தான் மடங்களிலும் ஆலயங் களிலும் நீங்கள் காண்பீர்கள். (நூல்: தப்ரானீ, ஹைசமீ, அறிவிப்பாளர்: ஸஹ்ல் பின் ஹனீஃப் (ரலி)

ஆக, நன்மைகளில் பல தரங்கள் உண்டு. சிறந்தவை; மிகச் சிறந்தவை. அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் பிடித்தவை; மிகப் பிடித்தவை.

இடையிடையே விட்டு விட்டு எப்பொழு தாவது சில தடவைகள் செய்யப்படும் ஏராளமான நற்செயல்களை விட இடை விடாமல் நிரந்தரமாக செய்யப்படும் பணிகளே சிறந்தவை. அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் மிகப் பிடித்தவை. அவை குறைவாக இருப் பினும் சரியே.

தம்மைத் தாமே சிரமப்படுத்திக் கொண்டு அதிகமாக இறைவழிபாடுகளில் திளைப்பது கூட தவறானதே.

தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி

அடிக் குறிப்பு: மேற்கண்ட நபிமொழியில் "உங்களுக்கு முன் வாழ்ந்த சமுதாயம்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறுவது யூதர்களையும் கிறிஸ்தவர்களையும்தான்.

அல்லாஹ் அனுமதித்த உணவுகளுள் சிலவற்றை உண்ணாமல் ஹராமாக்கி (விலக்கிக் கொண்டனர். ஒட்டக இறைச்சி சாப் பிடுவது யூதர்களுக்கு அனுமதிக்கப்பட் டிருந்தது. ஆனால், அவர்கள் அதைச் சாப்பிடு வதில்லை.

திருமணம் செய்திட அனுமதியிருந்தும் இல்லறத்தை துறந்தவனர் சிலர். இவ்வாறு அவர்கள் அநாவசியமான சிரமங்களை தம் மீது தாமே ஏற்றிக் கொண்டனர். அதனால் அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளாகி அழிந்தனர். "அவர்களில் மிஞ்சியவர்களை மடங்களிலும் ஆலயங்களிலும் நீங்கள் காண் பீர்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறுவது கவனிக்கத்தக்கது.

மேலும், இந்த அத்தியாயத்தினுடைய தொடக்கத்தில் இடம்பெற்றுள்ள 9:19, 9:20 ஆகிய வசனங்கள் இந்த நூலின் முதல் அத்தியாயத்திலும் இதற்கு அடுத்த அத்தி யாயத்திலும் இடம்பெற்றுள்ளன. பொருத்த மான காரணங்களுக்காகவே அவை திரும்பத் திரும்ப இடம்பெறுகின்றன.

அந்த வசனங்கள் இறங்கப் பெற்றதற்கான காரணத்தையும் பின்னணியையும் நீங்கள் தெரிந்து கொண்டால் மேலதிக விளக்கங் களுக்கு துணை செய்யும் என்பதால் கீழே அதைத் தருகிறோம்.

நபித் தோழர் நுஃமான் பின் பஷீர் (ரலி) கூறினார்கள்: ஒரு நாள் நான் நபி (ஸல்) அவர்களின் சொற்பொழிவு மேடை (மிம்பர்) அருகில் இருந்தேன். அப்போது ஒருவர், "நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பின்னர் கடமைகளைத் தவிர உபரியான) வேறு எந்த நற்செயலையும் செய்யாமலிருப்பதை இழப் பாகக் கருத மாட்டேன். ஹாஜிகளுக்கு குடிநீர் வழங்குவதைத் தவிர" என்றார்.

இன்னொருவர், "நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பின்னர் (கடமைகளை விட கூடுதலாக) வேறு எந்த நற்செயலையும் செய்யாமலிருப்பதை இழப்பாகக் கருத மாட்டேன். (கஅபா எனும்) புனிதப் பள்ளி வாசலை நிர்வகிப்பதைத் தவிர" என்றார்.

மற்றொருவர், "நீங்கள் சொல்வதை யெல்லாம் விட அல்லாஹ்வின் பாதையில்

போர் செய்வதே மிகச் சிறந்தது" என்று கூறினார்.

*அங்கிருந்த உமர் (ரலி) இம்மூவரையும் கண்டித்தார்கள். "நபி (ஸல்) அவர்களின் சொற்பொழிவு மேடையருகே இருந்து கொண்டு குரலை உயர்த்திப் பேசாதீர்கள். இது வெள்ளிக்கிழமை. நான் ஜுமுஆ தொழுகை தொழுதபிறகு நபி (ஸல்) அவர்களிடம் சென்று நீங்கள் கருத்து வேறுபாடு கொண்ட விவகாரத்தில் விளக்கம் கேட்பேன்" என்று கூறினார்கள்.*

*அப்பொழுது 9:19 வசனம் இறங்கிற்று. (நூல்: முஸ்லிம் 3824)*

*பத்ருப் போரில் எதிரணியில் பங்கேற்ற அப்பாஸ் (ரலி) அவர்களையும் அவரின் நண்பர்களையும் கைது செய்த முஸ்லிம்கள் அவர்கள் இணை வைப்பதைக் குறை கூறினர். அப்போது அப்பாஸ் முஸ்லிம்களிடம், "நாங்கள் புனிதப் பள்ளி வாசலைப் பரா மரித்தோம். கைதிகளை விடுவித்தோம். கஅபா எனும் இறையில்லத்துக்கு திரைச் சீலையை அணிவித்தோம். ஹாஜிகளுக்கு தண்ணீர் பரிமாறினோம். ("இந்தப் பெரும் பணிகளைச் செய்துவந்த எங்களைக் குறை கூறலாமா? என்றர்.*

*இதற்கு பதிலளிக்கும்படி இவ்வசனம் இறங்கிற்று. (நூல்: இப்னுகசீர்) மொழிபெயர்ப்பாளர்.*

# நான் ஏன் முஸ்லிம் ஆனேன்?

மௌலவி அபுல் ஹஸன் ஆலிம் பாஸி M.A.,

தொடர் – 10



**மனித இனத்தை** நெறிப்படுத்தவும், நேரான பாதையில் வழிநடத்தவும் வல்லோன் அல்லாஹ்வால் தேர்வு செய்யப்பட்டவர்களே இறைத்தூதர்கள். மனிதர்களாகப் பிறந்து, மனிதர்களாக வாழும் இறைத்தூதர்கள் இறைவனிடம் இருந்து தூதுச் செய்தியை பெற்று மக்களுக்கு அறிவிப்பார்கள்.

அல்லாஹ்வால் அனுப்பப்படும் அவர்களை மெய்யான இறைத்தூதர்களாகவும், அவர்கள் கூறும் செய்தியை இறைச்செய்தியாகவும் மக்கள் நம்பிட அவர்களுக்கு அற்புதங்களை அல்லாஹ் வழங்கி இருக்கின்றான். இதுவே அரபியில் முஃஜிஸா எனப்படும்.

### இறைத்தூதர்களும் அற்புதங்களும்

ஆதி பிதா ஆதம் (அலை) முதல் இறுதித் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் வரை ஏராளமானவர்கள் இறைத்தூதர்கள் பட்டியலில் உள்ளனர்.

அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான முஃஜிஸாவை அல்லாஹ் தந்திருந்தான்.

இறைத்தூதர் சாலிஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய பாறை பிளந்து அதிலிந்து வெளியேறிய கர்ப்பிணி ஒட்டகம், (காண்க அல்குர்ஆன் 7:73) இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு இதமளித்த நெருப்பு (காண்க அல்குர்ஆன் 21: 69), மூஸா (அலை) அவர்களின் கைத்தடி (காண்க அல்குர்ஆன் 20:17-20), நபி ஈஸா (அலை) அவர்கள் பிறவிக் குருடர்கள், தொழுநோயாளிகளை குணப்படுத்தியது, இறந்தவர்களை உயிர்த்தெழச் செய்தது (காண்க அல்குர்ஆன் 3:49) ஆகியவை அவற்றில் முக்கியமானவை.

### திருக்குர்ஆன் வாழும் அற்புதம்

இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் தந்த முழுமையான முஃஜிஸாவே திருக்குர்ஆன். திருக்குர்ஆனைப் பொருத்தவரை அது இறக்கியருளப்பட்ட காலம் முதல் இப்போது வரையிலும் பேரற்புதமாகவே திகழ்கின்றது.

கவிதை, சூனியம், ஜோஷியம், கதை, கற்பனை, சாத்தானின் மந்திர வார்த்தைகள், முஹம்மது நபி (ஸல்) அவர்களின் புனைவு என வரலாறு நெடுகிலும் எத்தனையோ அவதூறுகள் அதன் மீது எறியப்பட்டுள்ளன. அத்தனைக்கும் அப்பால் இறைவனின் வேத நூல் என்று வரலாற்றின் பல்வேறு தருணங்களில் அது நிரூபித்து வருகின்றது. அதனை தோற்கடிக்க முயன்றவர்கள் தான் தோற்றுப் போனார்களே தவிர அது எல்லா காலத்திலும் வெற்றியே பெற்றிருக்கின்றது.

திருக்குர்ஆனில் குறை கண்டுபிடிக்கும் நோக்கத்தில் அதனை வாங்கிப் படித்தவர்களில் பலர் திருக்குர்ஆன் ஆராய்ச்சியாளர்களாக மாறிய சம்பவங்களும் வரலாற்றில் உண்டு.

### டாக்டர் கேரி மில்லர் (Dr. Gary Miller)

சமகால உலகில் இதற்கு உதாரணமாக கனடா நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவ பாதிரியார் டாக்டர் கேரி மில்லரை (Dr. Gary Miller) குறிப்பிடலாம்.

கனடாவின் புகழ் பெற்ற கிறிஸ்தவ மத போதகரான இவர், பைபிள் சிறப்பு அறிஞர்களில் ஒருவர். அத்துடன் கணிதம் மற்றும் தர்க்கக் கலையில் வல்லவர்.

தமது நாவன்மை மிக்க பிரச்சாரத்தினால் கிறிஸ்தவ மக்களை கவர்ந்த டாக்டர் கேரி மில்லர், முஸ்லிம்களிடம் கிறிஸ்தவ பிரச்சாரம் மேற்கொள்ள விரும்பினார்.

முஸ்லிம்களிடம் பிரச்சாரம் செய்யும் பொழுது திருக்குர்ஆனில் உள்ள தவறுகளை எடுத்துக் காட்டி பிரச்சாரம் செய்ய வேண்டும் என்பது அவரது நோக்கம்.

ஏனெனில், அவர் திருக்குர்ஆனில் தவறுகள் இருக்க வாய்ப்புண்டு என்றே அதுவரை நம்பியிருந்தார். அவரைப் பொருத்தவரை அது 14 நூற்றாண்டுகளுக்கு முன்பு பாலைவனத்தில் வாழ்ந்த மனிதரைப் பற்றி பேசும் நூல் அவ்வளவுதான். அந்த எண்ணத்தில் தான் வாங்கினார். படித்தார். படிக்க படிக்க அவர் நினைத்தது போன்று திருக்குர்ஆன் இல்லாத தால் அதிர்ச்சியுற்றார். அவரது எண்ணம் சுக்கு நூறானது. தொடர்ந்து படித்தார். திருக் குர்ஆனின் அற்புதம் மீண்டும் ஒருமுறை வெளிப்பட்டது. ஆம்! குர்ஆனில் குறை கண்டுபிடிக்க புறப்பட்ட டாக்டர் மில்லரை குர்ஆன் உள்வாங்கிய நிகழ்வு நடக்கவே செய்தது. மில்லர் இஸ்லாத்தை ஏற்றார். பின்பு கனடாவின் மிகப்பெரும் இஸ்லாமிய அழைப்பாளர்களில் ஒருவரானார்.

### நான் ஏன் முஸ்லிமானேன்?

இஸ்லாத்தை ஏற்றது குறித்து அவர் கூறியதாவது, கனடாவில் கிறிஸ்தவ மக்க ளுக்கு மத ஊழியம் செய்து வந்த நான், கணிதம் மற்றும் தர்க்க கலையில் விருப்பம் உள்ளவன். தர்க்க ரீதியாக பிரச்சாரம் செய்து மக்களை கவர்ந்து விடுவேன். இந்நிலையில், முஸ்லிம் களுக்கு கிறிஸ்தவத்தை பிரச்சாரம் செய்திட நான் விருப்பப்பட்டேன். எனது தரப்பு வலிமையை அதிகப்படுத்திட திருக்குர்ஆனை படிக்க முடிவெடுத்தேன்.

என்னைப் பொறுத்தவரை திருக்குர்ஆன் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு பாலைவனத்தில் வாழ்ந்த ஒருவரைப் பற்றி பேசும் நூல். அவ்வளவுதான். இப்படித் தான் நினைத்திருந்தேன். ஆதலால் திருக்குர்ஆனில் நிச்சயம் தவறுகள் இருக்க வாய்ப்புண்டு என்று நம்பினேன்.

அத்தவறுகளை கண்டுபிடித்து அவற்றை முஸ்லிம்களிடம் எடுத்துக் காட்டி கிறிஸ்த வத்தை அவர்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டும். இதுவே எனது நோக்கம். இதற்காக குர்ஆனை வாங்கினேன். படிக்கத் தொடங்கினேன்.

### இயேசுவின் தாயாரின் பெயரில் அத்தியாயம்

திருக்குர்ஆனை படிக்கும் முன்பு நான் எண்ணியிருந்தேன் - முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் நடந்த சில இறுக்க மான சொந்த நிகழ்வுகள் அதில் இடம் பெற்றி ருக்கும் என்று. அன்னாரின் அன்பு மனைவி அன்னை கதீஜா (ரழி) , இன் இறப்பு மற்றும் அவர் வாழும் பொழுது இறந்த அவரின் ஆண் பெண் குழந்தைகளின் இறப்பு குறித்த தகவல்கள் அதில் இருக்கும் என்றே நினைத் திருந்தேன்.

ஆனால் அது பற்றிய தகவல் எதனையும் என்னால் அதில் பார்க்க முடியவில்லை.

ஆனால் கிறிஸ்தவர்கள் போற்றும் இயேசு (நபி ஈஸா) அவர்களின் தாயார் அன்னை மரியாள் (மர்யம்) அவர்களின் பெயரில் ஓர் அத்தியாயமே திருக்குர்ஆனில் இடம் பெற்றிருந்தது. முஹம்மது நபியின் மனைவி ஆயிஷா (ரழி), அன்னாரின் அன்பு மகள் ஃபாத்திமா (ரழி) ஆகியோரின் பெயரில் அத்தியாயம் ஏதும் திருக்குர்ஆனில் இல்லாத நிலையில், இயேசுவின் தாயாரின் பெயரில் அத்தியாயமா?

இது எனக்கு அதிர்ச்சியையும், ஆச்சரி யத்தையும் தந்தது. ஏனெனில், பைபிளிலும் சரி அல்லது கிறிஸ்தவர்களின் வேறு புனித நூல் களிலும் இயேசுவின் தாயாருக்கு இவ்வளவு மரியாதை தரப்படவில்லை.

### 25 தடவை இயேசுவின் பெயர்

இத்துடன் இன்னொன்றும் எனக்கு அதிர்ச்சியை தந்தது. அது திருக்குர்ஆனில் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பெயரை விட அதிக எண்ணிக்கையில் இயேசுவின் பெயர் கூறப்பட்டிருந்ததாகும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பெயர் திருக்குர்ஆனில் ஐந்து தடவை மட்டுமே கூறப்பட்டிருந்த நிலையில், இயேசுவின் (ஈஸா) பெயர் 25 தடவை கூறப்பட்டிருந்தது. நான் ஆச்சரியத்தின் உச்சத்திற்கே சென்றேன்.

### உண்மைத்தன்மை அறியும் சோதனைக்கு அறைகூவல்

முனைவர் படிப்பில் ஆய்வறிக்கைகளை சமர்ப்பிக்கும் பொழுதும், அவ்வாறே அறி வியல் ஆராய்ச்சி முடிவுகளை பரிசோதனைச் சாலைகளில் சமர்ப்பிக்கும் பொழுதும் அவற்றை உண்மைத்தன்மை சோதனை (Falsification test) க்கு உட்படுத்தப்படும்.

இது ஒரிஜினல் தானா? அல்லது ஏற் கனவே கண்டுபிடிக்கப்பட்ட கோட்பாடுகளில்

இருந்து காப்பியடிக்கப்பட்டுள்ளதா? என்பதை அறிந்திடவும், செய்முறை ரீதியில் பரிசோதனைச் சாலையில் அது வெற்றி யடைகிறதா? என்பதை கண்டறியவும் இச் சோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

எத்தனையோ அறிவியல் கோட்பாடுகள் இச்சோதனையில் தோற்றுப் போயிருக் கின்றன. பிரபலமான பல அறிவியல் கோட் பாடுகள் இதில் தவறுகளை சந்தித்திருக் கின்றன.

ஆனால் என்ன ஆச்சரியம்! திருக்குர்ஆன் தன்னை இச்சோதனைக்கு உட்படுத்தி, தவறு களைக் கண்டுபிடிக்குமாறு முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதவர்களுக்கும் அறைகூவல் விடுக்கின்றது. இதோ அதன் அறைகூவல்..

இக்குர்ஆனை அவர்கள் (சோதனைக் குட்படுத்தி) கூர்ந்து கவனிக்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் இதில் பல (தவறுகளையும்,) முரண்பாடுகளை(யும்) அவர்கள் கண்டிருப் பார்கள். (அல் குர்ஆன் 4:82)

இன்று வரை குர்ஆனின் அறைகூவல் நிலுவையில் தான் உள்ளது.

**குர்ஆனின் தைரியமான சவால்**

இத்துடன் இன்னொன்றையும் நான் யோசித்துப் பார்த்தேன்.

ஒரு நூலை எழுதி, பின்பு இதில் தவறே இல்லை என்று யாராவது தைரியமாக கூற இயலுமா? உலகில் யாருக்காவது எந்த எழுத் தாளருக்காவது அந்த தைரியம் இருக்கின்றதா?

ஆனால் குர்ஆன் இதற்கு முழுமையாக வேறுபட்டு நிற்கின்றது. தவறுகளை சுட்டிக் காட்டுமாறு சவால் விடுக்கின்றது. தவறே இல்லை என்று தைரியமாக கூறுகின்றது.

**பெரு வெடிப்புக் கோட்பாடு** (Big Bang Theory)

அண்ட வெளியில் கோள்கள், நட்சத் திரங்கள் எல்லாம் ஒரே பருப் பொருளாக ஒன்றாக இருந்தன. பின்பு அவற்றில் வெடிப்பு ஏற்பட்டது. அதன் பின்பே அவை தனித் தனி யாக விலகின என்பதை விளக்கும் கொள் கையே பெரு வெடிப்புக் கோட்பாடாகும்.

இதற்கு முன்னர் யாரும் கூறாததால் தான் இக்கோட்பாட்டுக்கு 1973 ம் ஆண்டு நோபல் பரிசு தரப்பட்டது.

ஆனால் திருக்குர்ஆனின் 21வது அத்தி யாயம் 30 வது வசனம் இக்கோட்பாட்டினை பேசியதை பார்த்து ஆச்சரியத்தில் உறைந்து போனேன். இதோ அவ்வசனம்.

நிச்சயமாக வானங்களும் பூமியும் ஒன்றாக ஒட்டி இருந்தன. நாம் தான் அதனை பிரித் தோம். இதனை நிராகரிப்பாளர்கள் கவனிக்க வேண்டாமா? (அல் குர்ஆன் 21:30)

**இஸ்லாத்தை ஏற்காமல் மரணித்த அபூலஹப்**

திருக்குர்ஆனில் என்னைக் கவர்ந்த அதன் ஆச்சரியங்களில் ஒன்று முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தை அபூலஹப் குறித்து அவர் மரணிக்கும் முன்பு கூறியதாகும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்க்கையில் கடும் துன்பங்களை தந்தவரே அன்னாரின் சிறிய தந்தை அபூலஹப்.

நபி (ஸல்) அவர்களை பின்தொடர்வதை வழக்கமாக கொண்டிருந்த அபூலஹப் எங்காவது நின்று நபி (ஸல்) அவர்கள் பிரச்சாரம் செய்தால், அவர்கள் சென்ற பின்பு அங்குள்ளவர்களிடம் நபி (ஸல்) என்ன பேசினார்கள்? என்பதை கேட்டுத் தெரிந்து

**கடினமான அத்தருணத்தில் அவரின் உள்ளம் எப்படி இத்துணை அமைதியாக இருந்தது? எதிரிகள் குகை வாசலில் நிற்கும் நிலையில், அவர் எப்படி பதட்டப்படாமல் இருந்தார்?**

**வாழ்க்கையின் விளிம்பில் நின்ற போதும் அவர் நம்பிக்கை இழக்காமல் இருந்ததை நினைத்து வியந்தேன். இறைவனின் தொடர்பில் இருக்கும் இறைத்தூதரைத் தவிர வேறு யாருக்கும் இவ்வளவு நம்பிக்கை வர வாய்ப்பில்லை.**

அதனை மறுத்து பேசிவிட்டு வருவார். இதுவே அவரின் வாடிக்கை.

நபி (ஸல்) அவர்கள் வெள்ளை என்று கூறியிருந்தால், இவர் கருப்பு என்பார். இரவு என்றால் இவர் பகல் என்பார். நபி (ஸல்) அவர்கள் பேசியதை மறுத்துப் பேச வேண்டும் என்பதைத் தவிர வேறு நோக்கம் அதற்கு இருக்காது.

இப்படிப்பட்ட மனநிலையில் வாழ்ந்த அபூலஹப் குறித்து ஓர் அத்தியாயமே இறங்குகிறது. அது ஆறு வசனங்கள் கொண்ட திருக்குர்ஆனின் 111 வது அத்தியாயம். அபூலஹப் இஸ்லாத்தை ஏற்க மாட்டான், நரகம் செல்வான் என்று அது முன்னறிவிக்கின்றது.

நபி (ஸல்) அவர்கள் என்ன சொன்னாலும் மறுத்துப் பேசும் அபூலஹப் இப்பொழுது என்ன சொல்லியிருக்க வேண்டும்? கலீமா கூறி முஸ்லிமாகி, தான் நரகவாதி இல்லை என்று நிரூபித்து இருக்க வேண்டும். (அச்சமயத்தில், அவன் நான் இஸ்லாத்தை ஏற்க மாட்டேனாம், நரகத்தில் நுழைவேனாம், முஹம்மது கூறுகிறார். நிச்சயமாக நான் முஸ்லிமாகுவேன் நரகத்தில் நுழைய மாட்டேன் என்று கிண்டலடிக்கவும் செய்தான்.)

ஆனால் நடந்தது என்ன தெரியுமா? இந்த அத்தியாயம் இறங்கிய பின்பு சுமார் பத்து ஆண்டுகள் அபூலஹப் உலகில் உயிரோடு இருந்தான். ஆனால் இஸ்லாத்தை ஏற்கவில்லை. ஆம். இஸ்லாத்தை ஏற்காதவனாகத் தான் அபூலஹப் மரணித்தான்.

நிச்சயமாக திருக்குர்ஆன் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சொந்த வார்த்தைகள் அல்ல. மாறாக மறைவானவற்றை அறியும் அல்லாஹ்வின் வேதமே என்பதற்கு அபூலஹபின் வாழ்க்கை வரலாற்றுச் சாட்சி.

**ஹிஜ்ரத்**

நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்து மதீனா நோக்கிய ஹிஜ்ரத் பயணத்தில் சவ்ர் குகையில் தங்கியிருந்தார்கள். அச்சமயத்தில் நபியை தேடி எதிரிகளும் அங்கு வந்து விட்டார்கள்.

எதிரிகள் குகைக்கு வெளியே பேசியது உள்ளே நபி (ஸல்) அவர்களுக்கும், அன்னாரின் மீது உயிரையே வைத்திருந்த அன்புத் தோழர் அபூபக்கர் (ரழி) அவர்களுக்கும் நன்கு கேட்கிறது.

அபூபக்கர் (ரழி) பதறுகிறார். அவர்கள் உள்ளே பார்த்து விட்டால் என்ன ஆகும்? என்று பயந்தவராக நபி (ஸல்) அவர்களிடம் இவ்வாறு கூறுகிறார். அவர்களில் ஒருவர் எட்டிப் பார்த்தால் நம்மை கண்டு விடுவார்!.

அச்சமயத்தில் நபி (ஸல்) அவர்கள் சொன்ன வார்த்தை அவர்கள் உண்மையான இறைத்தூதர் என்பதற்குரிய அத்தாட்சி.

அபூபக்ரே! இரண்டு பேர் என்று ஏன் கூறுகிறீர்..? மூன்றாமவனாக அல்லாஹ் இருக்கின்றான்! (நூல் :புகாரி)

திருக்குர்ஆன் இதனை இப்படி எடுத்தியம்புகிறது. தமது தோழரிடம் அந்நபி சொன்னார். கவலைப்படாதீர்.. அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான். ( அல்குர்ஆன் 9:40)

கடினமான அத்தருணத்தில் அவரின் உள்ளம் எப்படி இத்துணை அமைதியாக இருந்தது? எதிரிகள் குகை வாசலில் நிற்கும் நிலையில், அவர் எப்படி பதட்டப்படாமல் இருந்தார்?

யோசித்தேன். வாழ்க்கையின் விளிம்பில் நின்ற போதும் அவர் நம்பிக்கை இழக்காமல் இருந்ததை நினைத்து வியந்தேன். இறைவனின் தொடர்பில் இருக்கும் இறைத்தூதரைத் தவிர வேறு யாருக்கும் இவ்வளவு நம்பிக்கை வர வாய்ப்பில்லை. ஆதலால் தான் சாதாரண மனிதரான அபூபக்ர் (ரழி) பதட்டப்பட்டார்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் உண்மையான இறைத்தூதர் என்ற முடிவுக்கு வந்தேன். ஏனெனில், முஹம்மது (ஸல்) அவர்கள் பொய்யராக இருந்தால் அல்லாஹ்வின் மீது இத்துணை நம்பிக்கை வர வாய்ப்பில்லை.

திருக்குர்ஆனை படித்து, ஆய்வு செய்து இஸ்லாத்தை ஏற்ற இவர், அப்துல் அஹத் உமர் எனும் அழகிய பெயரில் வாழ்ந்த வருகிறார்.

தற்போது கனடாவில் இஸ்லாமிய பிரச்சாரப் பணியை மேற்கொண்டு வரும் இவர், கலந்துரையாடல்கள், பொதுக்கூட்டங்கள், விவாதங்கள் வழியாகவும், இணையதளம் மற்றும் முகநூல் வழியாகவும் திருக்குர்ஆனின் அற்புதமான கருத்துக்களை பரப்பி வருகிறார். இவரால் கனடாவிலும், கனடாவுக்கு அப்பாலும் பலர் இஸ்லாத்தை தழுவியுள்ளனர்.

இவரின் திருக்குர்ஆனின் அற்புதம் ( முதல் பதிப்பு 1992) நூல், பல மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

அதனை உள்வாங்கி குர்ஆனும் நவீன விஞ்ஞானமும் என்ற தலைப்பில் பலர் நூல்கள் எழுதியுள்ளனர். அன்னாரை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!

Source : The Amazing Quran by Dr. Gary Miller (Abdul-Ahad Omar)

# விடுமுறையும் விறுவிறுப்பும்



தொடர் - 10

**பள்ளிப் பாடங்கள்** விரட்டிய நாள்கள் ஓய்ந்து விட்டன. பள்ளி விடுமுறைகள் தொடங்கி விட்டன. குழந்தைகளை ஓய் வெடுக்க அனுமதிக்க வேண்டிய நாட்கள் வந்துவிட்டன.

இந்த நிலையிலும் அவர்களை நம்மில் பலர் ஓய்வெடுக்க அனுமதிப்பதில்லை.

இன்றே மருத்துவர் ஆகிவிட வேண்டும்; அல்லது பொறியியல் வல்லுநர் ஆகிவிட வேண்டும் என அலட்டுகின்றனர். அதைப் படி, இதைப் படி என அழுத்தங்களைத் தருகின் றனர்.

நாம் நமது மழலைகளுக்குத் தந்திடும் தொல்லைகள் எந்த அளவுக்குப் போய் விட்டது என்றால் அவர்கள் வாழ்க்கையை வெறுத்திடும் அளவுக்கே போய் விட்டார்கள். வாழ்க்கையைத் தொடங்கும் முன்பே அவர்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் அளவுக்கு விரக்தியின் விளிம்பிற்கே ஓட்டப்பட்டு விடுகிறார்கள்.

பள்ளித் தேர்வு முடிவுகள் வந்தவுடன் சில குழந்தைகள் தங்கள் வாழ்வை முடித்துக் கொண்டார்கள் என்ற செய்தி நமது செவி களில் செந்தேள்களாக வந்து கொட்டுகின்றன. (இந்த ஆண்டு இதுபோல் செய்திகள் வராமல் இறைவன் காப்பாற்றட்டும்.)

அண்மைக் காலங்களில் மாணவர்கள் சற்றே முன்னேறிவிட்டார்கள். அவர்களே தங்களது மழலைப் பருவம் தொலைந்து போவதைத் தடுத்திட முன்வந்துள்ளார்கள்.

ஆகவே, எங்கள் மழலைப் பருவம் எங்களுக்குச் சொந்தம் எனக் கொடி பிடிக்கத் தொடங்கி விட்டார்கள்.

**என்னே அவலம்?**

மழலைகள் தங்கள் மழலைப் பருவத்தைத் தற்காத்துக் கொள்ள கொடி பிடிக்கின்றார்கள்.

நமது தலைநகர் டெல்லியில் மார்ச் 19, 2006 அன்று நடந்த போராட்டம் ஒன்றில் குழந்தைகள் இப்படி கொடி பிடித்தனர்:

“அன்பார்ந்த பெற்றோர்களே! எங்க ளுக்கு எதில் ஆர்வமிருக்கின்றதோ அதைப் படிக்க விடுங்கள். உங்கள் பேராசையை எங்கள் மீது திணிக்காதீர்கள்.”

கல்வி, முன்னேற்றம் என்ற போர்வையில் மழலைகளின் வாழ்க்கையை நாம் பாழாக்கிக் கொண்டிருக்கின்றோம். அவர்களின் அகவைக்கு அதிகமான அழுத்தங்களைத் தந்து கொண் டிருக்கின்றோம். இதையே மழலைகள் பிடிக்கும் பதாகைகள் நமக்குக் காட்டுகின்றன.

அவர்களின் மனங்களை சிறைப் பிடிப்பது, அதாவது பெற்றோர்களின் பேராசைகளை அவர்கள் மீது திணிப்பதை நிறுத்துவோம்.

அவர்களுக்கு, அவர்களின் மழலைப் பருவத்தின் சுதந்திரத்தைத் தருவோம்.

அதைப் படி, இதைப் படி என சதா சர்வ காலமும் அவர்களை அல்லல்படுத்தியது போதும், அவர்களின் மனம் போல் நிறைய விளையாட விடுவோம்.

வசதியும், வாய்ப்பும் வாய்க்கப் பெற்றோர், தங்கள் மழலைகளை அழைத்துச் சென்று நம்மைச் சுற்றியுள்ள உலகை அவர்களுக்குக் காட்டலாம். இஃது அவர்களின் மனவளர்ச் சியை வெகுவாக வளர்க்கும்; பண்படுத்தும்.

சுதந்திரமாக அவர்கள் சிந்திக்க வெளியூர் பயணங்கள் உதவி செய்யும். வெளியுலகத் தொடர்புகளின் சிந்தனையை விரிவாக்க பெரிதாக எதையேனும் செய்ய வேண்டும் என்ற மன உந்துதலைத் தரும்.

விஷன் 'Vision' என்ற புலன்களின் அகப் பார்வையை கற்பனை வளத்தை விசாலமாக்க, வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்லலாம். அங்கே அவர்களுக்கு வாழ்ந்து மறைந்த சமுதாயங் களின் சாதனைகளையும் வேதனைகளையும் நினைவுபடுத்தும். இந்த உலக வாழ்க்கை முடிவுக்கு வரும். அத்துடன் விரைந்து செயல்பட்டிட வேண்டும் என்கிற உத்வேகம் பிறக்கும்.

இத்தனையும் வாய் திறந்து நாம் எதையும் சொல்லாமலேயே மழலைகள் மனதில் தேக்கிக் கொள்வார்கள்.

இவை அல்லாமல் கரைக்குப் பின் கடற்கரையோரங்களில் புது மாற்றங்கள் நடந் துள்ளன. சில பல இடங்களில் கடல் உள் வாங்கி இருக்கின்றது. இதுவும் கடலுக்குள் ளிருந்த இடங்கள் தோற்றம் தந்துள்ளன. இவையெல்லாம் வாழ்வின் யதார்த்தத்தை அலட்டிக்காமல் உள்ளங்களில் பதிய வைக்கும்.

அதே போல் நமது கடற்கரையோரங்கள் இறைவன் இருக்கின்றான். இந்த உலகில் அவனே அறுதியான ஆளுமையுடையவன் என்பதை எடுத்துச் சொல்லும். இதனை மழலை களுக்கு எடுத்துச் சொல்லி, இறைவனைப் பற்றிய நினைவை நெஞ்சங்களில் நிலைக்கச் செய்யலாம்.

சுனாமியின் சோகம் மட்டும்தான் இறைவனை நினைவூட்டும் என்றில்லை.



குளுகுளு மலைகளும், பறவைகளும், பச்சைக் கிளிகளும், கொஞ்சும் பச்சை நிறப் புல்வெளிகளும், அழகைப் படைப்பதில் அவனே ஆற்றலுடையவன் என்பதை அறிவுறுத்தும். இறைவன் தனித் தன்மைகளை உரக்கப் பேசும்.

அவன் படைக்கும் இயற்கை அழகுக்கு இணையில்லை. அதே போல் அவனுக்கும் இணை இல்லை; துணையில்லை.

இவற்றையெல்லாம் பிஞ்சு நெஞ்சங்களில் பதிக்கலாம். பசுமரத்தாணி போல்!

மழலைகளுக்கு இந்தப் போதனைகளை யெல்லாம் உரிய நேரத்தில வழங்குவது பெற்றோர்களின் தலையாய கடமை.

இவையெல்லாம் உரிய நேரத்தில் வழங்கப் பெற்றால் மழலைகள் நல்ல ஒழுக்கமுடையவர்களாக வாழ்வார்கள்.

ஆறு வயதிலிருந்து 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இந்தப் பயணங்கள் பெரிய அளவில் பயன்படும் என்கின்றார் குழந்தை வளர்ப்பு நிபுணர் டாக்டர் பென்ஜமின் ஸ்போக்:

"இந்த வயதில்தான் குழந்தைகள் வெளி உலகில் தனித்து நிற்க தங்களைத் தயார் படுத்துகின்றார்கள். இந்த வயதில் அவர்கள்

பயணங்களை மேற்கொள்வதையும் படிப் பினைகளைப் பெறுவதையும், இறைவனின் படைப்புகளைப் பற்றி சிந்தித்துப் பார்த்திட வேண்டியதையும் இறைவன் தனது இறுதி வழிகாட்டுதலாம் இறைமறையில் – அல் குர்ஆனில் வலியுறுத்துகின்றான்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங் களைப் பார்வையிட்டால், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பரிசுகளை வழங்கலாம்.

முதிர்ச்சியை நோக்கி நகருகின்றார்கள். இந்த வயதில் அவர்களுக்குள் வளரும் மனவளர்ச் சிக்கும், கற்பனை வளர்ச்சிக்கும், கற்பனை வளர்ச்சிக்கும் உரிய வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

நீ வருகின்றாய் வெளிஉலகோடு நீ கைகோர்த்திட கற்றுக் கொள். உன்னுடைய நடத்தைகளை (Conduct) முறைப்படுத்திக் கொள் என்ற பாடங்களை அவர்களுள் வாகாய் பாடம் சொல்லித் தராமல் கற்றுத் தரும் கலாசாலைகள் சுற்றுலாப் பயணங்கள்."

Courtesy : Baby and Child care By Benjamine Spock pp.430/431

இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"உங்கள் குழந்தை ஏழு வயதை எட்டி விடும் போது தொழுகையை நிறைவேற்றும் படி அவர்களுக்கு ஏவுங்கள். அவர்கள் பத்து வயதை எட்டி விடும் போது தொழுகையைத் தவற விட்டால் அவர்களை அடியுங்கள். இந்த வயதை அடைந்ததும் அவர்களின் படுக் கையைத் தனித்து அமையுங்கள்."

பயணங்களை மேற்கொள்வதையும் படிப் பினைகளைப் பெறுவதையும், இறைவனின் படைப்புகளைப் பற்றி சிந்தித்துப் பார்த்திட வேண்டியதையும் இறைவன் தனது இறுதி வழிகாட்டுதலாம் இறைமறையில் - அல் குர்ஆனில் வலியுறுத்துகின்றான்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங் களைப் பார்வையிட்டால், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பரிசுகளை வழங்கலாம்.

அவர்களோடு சற்று அதிகமான நேரங் களைச் செலவிடலாம். இறைவனை அவர் களுக்கு அறிவுறுத்தலாம்.

அஃது அவர்களுக்கு ஆறுதல். நமக்கு இறைவனிடம் நற்கூலிகளைப் பெற்றுத் தரும் நல்ல செயல். மழலைகளை மனம் போல் வாழ வைப்போம். அதில் மகிழ்ச்சியடைவோம்.

# கொட்டிக் கிடக்கின்றன
# சிறுபான்மையினருக்கான சலுகைகள்

அள்ளிக்கொள்ளுங்கள் அரசின் சலுகைகளை

அரசு அதைத் தந்திடவில்லை; இதைத் தந்திடவில்லை என ஆர்ப்பாட்ட, போராட்டங்கள் எங்கணும்.

ஆனால், கொட்டிக் கிடக்கின்றன அரசின் திட்டங்கள், உதவிகள், கடன்கள் என்பன. அள்ளிக் கொள்வார் யாருமில்லை என்கிறார்கள்.

மூத்த சமூகத் தொண்டன் கல்வியாளர் கேப்டன் அமீர் அலீ அவர்கள், கல்லிடை K.M.அசன் ஷேஹ், முன்னாள் சிறுபான்மை மேம்பாட்டு அதிகாரி T.ரிஸ்வான் அஹ்மத் ஆகியோர் அரசு சலுகைகள் பற்றிய அனைத்து தகவல்களையும் ஓர் அரிய நூலாகத் தந்துள்ளார்கள்.

அந்த நூலின் ஒரு பகுதியை இங்கே தந்துள்ளோம். முழுநூலைப் பெற்றிட கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

**கும்பகோணம் இஸ்லாமிய சோஷியல் வெல்ஃபேர் அசோசியேஷன், 85, நாகேஷ்வரன் தெற்கு வீதி, கும்பகோணம். போன் :** 0435-2424241

**அகில இந்திய** *அளவில் முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர் ஆகியோர் மதச் சிறுபான்மையினராக நம்பப் படுகிறார்கள். முஸ்லிம்கள் இந்தியாவிலேயே மிகப் பெரிய சிறுபான்மைச் சமூகமாக இருப்பது கண்கூடு. இவர்களுக்கென இந்திய அரசும்,மாநில அரசுகளும் பல வகையான சலுகைகளையும், மானியங்களையும், கடன் களையும், நிதி உதவிகளையும், இலவச திட்டங் களையும், கல்வி உதவித் தொகைகளையும், தொழில்சார்ந்த பயிற்சிகளையும் வழங்கி வருகின்றன.*

*நாடு முன்னேற வேண்டுமானால், இந்தியா வலிமை பெற வேண்டுமானால் நாட்டின் முன்னேற்றத்தோடு இணைந்து முஸ்லிம் சமூகமும் முன்னேற வேண்டுமானால் முஸ்லிம்களும் வலிமை பெற வேண்டுமானால் அவர்களைக் கைதூக்கி விட வேண்டும் என்பது அரசுகளின் கடமையாகிறது எனக் கருதித் தான் சிறுபான்மையினருக்கான நலப் பணிகள் செயல்படுத்தப் படுகின்றன. நான் கல்வி யாளன்.*

*ஆகவே,சிறுபான்மையினரைப் பொறுத்த வரை கல்வி சார்ந்த அரசுத் திட்டங்கள் யாவை என்பதைச் சொல்லுமுன் பொதுவாக சிறு பான்மையினருக்கு என்னென்ன திட்டங்கள் வகுக்கப்பட்டிக்கின்றன என்பதைச் சொல்லி யாக வேண்டும்.*

*வீட்டு மனைப்பட்டா, வேலை வாய்ப்பு, பல வகைக் கடன்கள், மூக்குக் கண்ணாடி வழங்கல், காது கேட்கும் கருவி, ஈமச்சடங்கு உதவித் தொகை, உற்பத்தி நிறுவனங்களுக்கு உதவித் தொகை, மூலதனமானியம், மின் மானியம், கறவை மாடு வழங்கல், தனிநபர் கடன்,ஆட்டோவாங்கக்கடன்,மகப்பேறு உதவித் தொகை, விதனை மறுமண உதவி, இலவச தையல் இயந்திரம், முதியோர் பென்சன், மருத்துவ நிதி உதவிகள் இன்னும் சிறு பான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் வழங்கும் பல்வகை நிதியுதவிகளும், பயிற்சிகளும் என்று பலப் பல வகையான நலப் பணிகளைச் சிறுபான்மை யினருக்காக மத்திய அரசுகள் செய்து வருவதை யாவரும் அறிவர்!*

*நம் நாட்டைப் போன்ற பலவகைச் சமுதாயங்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் பின் தங்கியுள்ள ஒரு சமுதாயம் பிற சமுதாயங் களோடு ஒன்றிணைந்து செயல்பட்டு முன்னேற வேண்டுமானால் அதற்குத் துணை நிற்கும் கருவி கல்வியே என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. கல்வியில் முன்னேறிய சமுதாயம் தன்னைத் தானே பல துறைகளிலும் முன்னேறிக் கொள்ளும் திறன் பிற்பட்ட வர்கள் வாழும் பகுதியில் நிறைய பள்ளிகளைத் தொடங்க வேண்டும் எனப் பரிந்துரை செய்திருக்கிறார்.*

இந்தியச் சிறுபான்மையினர் குறிப்பாக முஸ்லிம்கள், ஆண்களும் சரி, பெண்களும் சரி, கல்வியில் மிகவும் பின்தங்கியுள்ளனர் என்பதை வலியுறுத்தவே, நீதிபதி சச்சார் அறிக்கை பல தீர்வுகளை முன்மொழிந்துள்ள. பாரதப் பிரதமரின் 15 அம்சத் திட்டம் கூட சிறு பான்மையினர், பிற சமூகத்தினருக்கு நிகராக முன்னேற்றம் பெற வேண்டும் என்ற கருத்திலே பல திட்டங்களைச் செயல்படுத்துவதில் முனைந்துள்ளது. மத்திய அரசு அளவில் சிறு பான்மையினர்க்கென தனி அமைச்சரவையை உருவாக்கி இருக்கிறார் நம் பிரதமர். ஏற்கனவே இருந்து வரும் சிறுபான்மைக் குழுமம் (Minority Commission) மேலும் வலுப்பெற வேண்டும் என்ற கருத்திலும் பிரதமர் நட வடிக்கை எடுத்துள்ளதைப் பாராட்ட வேண்டும்.

மௌலானா ஆசாத் அமைப்பின் மூலமாக கல்விக் கூடங்கள் கட்டுவதற்கு நிதி யுதவி, கல்வி உதவித் தொகை எனச் சிறு பான்மையினர் கல்வி முன்னேற்றத்திற்கென பெரிய நிதியம் ஒன்றையும் மத்திய அரசு நிறுவியுள்ளது. சிறுபான்மையினர் வங்கி களிடமிருந்து கல்விக் கடன்கள் பெறும் போது, வங்கி களுக்கான வட்டித் தொகையை மானியமாக வங்கிகளுக்கு மத்திய அரசே வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

### வட்டி செலுத்த வேண்டாம்

அதாவது, சிறுபான்மை இன மாணவர்கள் தங்கள் கடனுக்கு வட்டி செலுத்த வேண்டிய தேவையில்லை. வெளிநாடு சென்று பயிலும் மாணவர்களுக்கும் இச்சலுகை உண்டு. படிப்பு முடித்து ஓராண்டுக்குப் பிறகு அல்லது வேலையிலமர்ந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு இந்தக் கடனைத் திரும்பச் செலுத்தத் தொடங்கி, ஐந்து ஆண்டுகளுக்குள் கடன் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். மத்திய அரசின் கல்விக்கூடங்கள் IIM, IISC, IIT, NIT போன்ற அமைப்புகளில் சேர்க்கை சலுகைகளும் கல்வி உதவித் தொகைகளும் சிறுபான்மையினருக்கு வழங்கப்படுகின்றன.

### வேலைவாய்ப்பு

கல்வியளித்துவிட்டால் மட்டும் போதுமா? ஒரு சமூகம் முன்னேறி விடுமா? இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதைப் போல், கல்வி சார்ந்த பல வகை வாழ்க்கைக் கல்விகளையும் (Softskills) பயிற்சிகளையும் (Training) மத்திய அரசு, மாநில அரசுகளின் துணையுடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

பெற்றோருக்கு ஒரே குழந்தையாக, பெண் குழந்தையாக இருந்தால் கடைசி வரை படிப்பதற்குக் கல்வி உதவித் தொகை உண்டு. இதைவிட வேறென்ன வேண்டும்? எந்த ஒரு சமுதாயத்திலும் பெண்கள் கல்வி அறிவு பெற்றால்தான் அச்சமுதாயம் முன்னேறி யதாகக் கருதப்படும் என்பதில் பிரதமருக்கு ஆழ்ந்த நம்பிக்கையுண்டு என்பதை அவரு டைய பல திட்டங்கள் நமக்குப் புலப்படுத்து கின்றன.

கல்வியைத் தவிர சிறுபான்மை யினருக்குப் பல வகையான மானியங்களும் கடன்களும் சலுகைகளும் மத்திய அரசால் வழங்கப்படுகின்றன என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். மாநில அளவில் தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை (Backward Classes and Minority Welfare Department) இயங்கி வருகிறது. இத்துறையின் வாயிலாக ஏராளமான கல்விச் சலுகைகளைத் தமிழக அரசு வழங்கி வருகிறது.

### மாணவர் விடுதிகள்

மாணவர் விடுதிகளில் சிறுபான்மை யினருக்கு இலவச தங்கும் வசதி, இலவச உணவு, இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகள் வழங்கப்படுகின்றன. ஏன், 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் பொதுத் தேர்வில் வெற்றி பெற இலவசமாகச் சிறப்பு வழிகாட்டி வகுப்புகளும் நடத்தப் பெறுகின்றன. இந்தத் துறையின் மூலமாகச் சிறப்புக் கட்டணம் (Special Fees) ஈடு செய்யப் படுகிறது. இறுதித் தேர்வுக்கான தேர்வுக் கட்டணமும் வழங்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் ஆங்கில மொழி வழி பயிலும் (English Medium) மாணவர் களுக்குப் படிப்புக் கட்டணம் (Tuition Fees) 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை வழங்கப்படுகிறது. ஒரு குடும்பத்தில் எவரும் பட்டதாரி இல்லையெனில், அக்குடும்பம் சார்ந்த மாணவருக்கு, பொறியியல் மற்றும் மருத்துவக் கல்வி வரை இடம் கிடைக்கச் செய்வதோடு கல்வி உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. சிறுபான்மையினரின் கல்வி வளர்ச்சியில் துணை நிற்பது தொலைநிலைக் கல்வியும் (Distance Education) திறந்த வெளிப் பல்கலைக் கழகமும் (Open University) என்பதை அரசு நன்கு உணர்ந்திருக்கிறது.

பட்டம் பெற்றோர் இவற்றின் மூலமாக பட்டம் பெறும் வாய்ப்பு உண்டாகிறது. பட்டம் பெற்றவர்களுக்குப் பட்ட மேற்படிப்பு வாய்ப்பு கிட்டுவதால், அரசு இவ்வகைக் கல்விக்குப் பெரிதும் ஊக்கமளித்து வருகிறது. இன்னும் சொல்லப் போனால், சமுதாயக் கல்லூரிகள் (Community Colleges) சிறுபான்மை யினரின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் தூண்டுகோலாக அமையும் என்பதால் அரசு அதனையும் பிரபலப்படுத்தி வருகிறது.

கணிணிப் பட்டப் படிப்பு, கணிணிப் பராமரிப்பு மற்றும் நெட்வொர்க் மின்சாரம் மற்றும் மோட்டார் ரீவைண்டிங், கணக்கியல் மென்பொருள் பயிற்சி (Tally), டெஸ்க் டாப் பப்ளிஷிங், செல்போன் சர்வீஸிங், ஆட்டோ கேட் போன்ற எண்ணற்ற தொழிற்பயிற்சிகளும் வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டங்களும் வகுக்கப்பட்டு வருகின்றன. இவையெல்லாமே சிறுபான்மையினரின் நலத் திட்டங்கள் என்பதை உரத்த குரலில் நாம் சொல்லலாம்.

ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகளும், நடத்தப் பெறுகின்றன. இவ்வளவு இருந்தும் சிறுபான்மையினர்க்கிடையே போதுமான விழிப்புணர்ச்சி இல்லாத காரணத்தால் அரசுகளின் முயற்சிகளுக்கேற்ப பலன் கிடைத்துள்ளதா என்றால் இல்லையென்றே சொல்ல வேண்டும்.

காரணம் என்னவென்று பார்த்தால் நீண்ட நெடுங்காலம் நாட்டு வளர்ச்சியில் பின்தள்ளப்பட்டவர்கள் மீண்டெழுவதற்கு சுணக்கம் ஏற்படுவது இயல்புதான் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். இருந்தாலும் கல்வி உதவித் தொகையைப் பொறுத்த அளவில் சில சமுதாய அமைப்புகளும் கொடை உள்ளம் படைத்த நல்லவர்களும் இளைஞர்களிடையே கல்வியை ஊக்குவிக்க ஏராளமான பொருளுதவி வழங்க முன்வந்திருப்பது ஒரு நல்ல திருப்பம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இது தவிர, சிறுபான்மைச் சமூகத்தினர் பலர், கல்வி வளர்ச்சியில் அரசுக்கு ஒத்துழைப்பு தரும் வகையில் எண்ணிறந்த பள்ளிகளையும் கல்லூரிகளையும் பொறியியல், தொழிற்பயிற்சிப் பள்ளிகளையும் தொடங்கி சமுதாயத்தைத் தூக்கி நிறுத்த முயல்வது பாராட்ட வேண்டிய முனைப்பு ஆகும். இவற்றின் விளைவாக, சிறுபான்மையினரின் முன்னேற்றம் விரைவில் கிட்டலாம். சிறுபான்மையினரைப் பொறுத்த வரை வேலை வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால், அவற்றுக்குத் தகுதி பெற பயிற்சி அளித்து ஆயத்தம் செய்யப்பட வேண்டும்.

**சிறுபான்மையினர் நலத்துறை**

சிறுபான்மையின மக்களின் கல்வி, சமூகம் மற்றும் பொருளாதார நிலைகளைப் பெரும்பான்மையினருக்கு நிகராக ஏற்பாடு செய்திடும் நோக்கத்திலும் இப்பிரிவனரின் வாழ்க்கை தரத்தை உயர்த்திட கல்வி ஒரு முக்கியமான ஊன்றுகோலாகும் என்ற அவசியத்தை கருத்தில் கொண்டு இவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு அரசு அதிக அளவில் முனைப்பாக செயல்பட்டு வருகிறது.

சிறுபான்மையின மக்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்திட தனியே சிறுபான்மையினர் நல அமைச்சகம் தோற்றுவிக்கப்பட்டு, மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் அவை பெருகி வருகின்றன.

**நிர்வாக அமைப்புகள் மாநில அளவில்**

| வ.எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இந்திய ஆட்சிப் பணி அலுவலர் - துறைத்தலைவர் | 1 |
| 2 | இயக்குநரின் நேர்முக உதவியாளர் | 1 |
| 3 | கணக்கு அலுவலர் | 1 |
| 4 | கண்காணிப்பாளர் | 2 |
| 5. | உதவியாளர் | 6 |
| 6. | இளநிலை உதவியாளர் | 2 |

| | | |
|---|---|---|
| 7. | சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-1) | 1 |
| 8. | சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-3) | 1 |
| 9. | தட்டச்சர் | 2 |
| 10. | ஓட்டுநர் | 2 |
| 11. | பதிவுறு எழுத்தர் | 1 |
| 12. | அலுவலக உதவியாளர் | 3 |
| | மொத்தம் | 23 |

**மாவட்ட அளவில்**

| | | |
|---|---|---|
| 1. | கண்காணிப்பாளர் | 1 |
| 2. | இளநிலை உதவியாளர் | 1 |
| 3. | தட்டச்சர் | 1 |
| | மொத்தம் | 3 |

32 மாவட்டங்களுக்கு மொத்தம் 96 பணியிடங்கள்

தனி இடஒதுக்கீடு

பிற்படுத்தப்பட்டோர் இனத்தவர்களுக்கான 30 சதவீத இட ஒதுக்கீட்டில், பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர்களுக்கென அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் வேலை வாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்காக 3.5 சதவீத தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

கல்வி உதவித் தொகை

அரசு / அரசு உதவி பெறும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கல்வி நிலையங்களில் ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி / ஆராய்ச்சிப் படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு மத்திய அரசின் மூன்று வகையான கல்வி உதவித் தொகை திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது.

விவரங்கள் பின்வருமாறு

| கல்வி உதவித் தொகை விவரம் | பயிலும் வகுப்புகள் | பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு | நிதி பங்களிப்பு முறை |
|---|---|---|---|
| பள்ளிப்படிப்பு | 1 முதல் 10ஆம் வகுப்பு வரை | ரூ. 1 இலட்சம் | 75:25 மைய : மாநில அரசு |
| பள்ளிப்படிப்பு | 11 முதல் ஆராய்ச்சி படிப்பு வரை | ரூ. 2 இலட்சம் | 100% மைய அரசு |
| பள்ளிப்படிப்பு | தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி | ரூ. 2.50 இலட்சம் | 100% மைய அரசு |

இத்திட்டங்களின் கீழ் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள்

1. மாணவ, மாணவியர்கள் முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் மூன்றாம் வகுப்பு நீங்கலாக 50 விழுக்காட்டிற்குக் குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

2. இத்திட்டங்களின் கீழ் மொத்த பயனாளிகளில் 30 விழுக்காடு மாணவியருக்கென ஒதுக்கீடு செய்யப்படும்.

3. தமிழகத்தைச் சொந்த ஊராகக் கொண்டவர்கள் வேறு மாநிலத்தில் படித்தால் அவர்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

*4. ஒரு குடும்பத்தைச் சார்ந்த இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.*

*5. இத்துறையால் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை பெறுபவர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை / ஆதிதிராவிடர் நலத்துறை / பிற துறைகள் / நல வாரியங்கள் ஆகியவற்றில் எவ்வித கல்வி உதவித் தொகையும் பெறக் கூடாது.*

**பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை**

*இத்திட்டத்தின் கீழ் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை ஒப்பளிக்கப்படுகிறது.*

*இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை விவரங்கள் பின்வருமாறு:*

| விவரங்கள் | | விடுதியில் தங்கி பயில்பவர்கள் | விடுதி வசதியின்றி பயில்பவர்கள் |
|---|---|---|---|
| சேர்க்கைக் கட்டணம் (6 முதல் 10 வகுப்பு வரை) | | மாணவ/மாணவியர்களால் உண்மையிலேயே செலுத்திய தொகை (அ) ஆண்டிற்கு அதிகபட்சம் ரூ.500/- | |
| கற்பிப்பு கட்டணம் (6 முதல் 10ஆம் வகுப்பு) | | மாணவ/மாணவியர்களால் உண்மையிலேயே செலுத்திய தொகை (அ) ஆண்டிற்கு அதிகபட்சம் ரூ.3500/- | |
| பராமரிப்புக் கட்டணங்கள் (கல்வி ஆண்டில் 10 மாதங்களுக்கு மட்டும்) | 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை | இல்லை | ரூ.1000/- |
| | 6 முதல் 10ஆம் வகுப்பு வரை | ரூ. 8000/- | ரூ.1000/- |

**பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை**

*இத்திட்டத்தின் கீழ் பதினொன்றாம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்குக் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை ஒப்பளிக்கப்படும்.*

| விவரங்கள் | சேர்க்கை (ம) கற்பிப்புக் கட்டணம் (அதிகபட்சமாக) | பராமரிப்புக் கட்டணங்கள் (10 மாதங்களுக்கு மட்டும்) | |
|---|---|---|---|
| | | விடுதியில் தங்கி பயில்பவர்கள் | விடுதி வசதியின்றி பயில்பவர்கள் |
| +1 (ம) +2 வகுப்புகள் | ரூ.7,000 | ரூ. 3,800/- | ரூ. 2,300/- |
| +1(ம) +2 வகுப்பு நிலையில் வாழ்க்கை தொழிற்கல்வி, ஐ.டி.ஐ, ஐ.டி.சி, NCVT வகுப்புகள், பாலிடெக்னிக், டிப்ளமோ இன் நர்சிங், ஆசிரியர் பட்டயப் பயிற்சி ஆகியவை | ரூ. 10,000/- | ரூ. 3,800/- | ரூ. 2,300/- |
| இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு | ரூ. 3,000/- | ரூ. 5,700/- | ரூ. 3,000/- |
| எம்.பில் மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு | —— | ரூ. 12,000/- | ரூ. 5,500/- |

*தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத்திட்டம் இத்திட்டத்தின் கீழ் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்குக் கல்வி உதவித் தொகை ஒப்பளிக்கப்படுகிறது.*

மத்திய அரசால் தெரிவு செய்யப்பட்ட 85 கல்வி நிலையங்களில் (Listed Institutions) பயிலும் மாணவ, மாணவியர் செலுத்தும் முழு கல்விக் கட்டணங்களும் (திரும்பப் பெறும் கட்டணங்களைத் தவிர்த்து) மீள வழங்கப்படும்.

கீழ்க்கண்ட ஐந்து கல்வி நிலையங்கள் மைய அரசால் தெரிவு செய்யப்பட்டுள்ள பட்டியலில் உள்ளவை:

1. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (IIT) - சென்னை.

2. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (NIIT) - திருச்சி.

3. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி மற்றும் வடிவமைப்பு (ம) தயாரித்தல் (IIT & DM) - காஞ்சிபுரம்.

4. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் பேஷன் டெக்னாலஜி (சூஐகுகூ), சென்னை மற்றும் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்ட் (IIM), திருச்சி.

ஏனைய கல்வி நிறுவனங்களில் பயிலும் தகுதியுள்ள சிறுபான்மையின் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை விவரங்கள் பின்வருமாறு:

| கல்வி உதவித் தொகை விவரங்கள் | விடுதியில் தங்கி பயில்பவர் | விடுதியில் வசதியின்றி பயில்பவர் |
|---|---|---|
| கற்பிப்புக் கட்டணம் | ரூ. 20,000/- | ரூ. 20,000/- |
| பராமரிப்புக் கட்டணம்(*) | ரூ. 10,000/- | ரூ. 50,000/- |

(*) ஒரு கல்வியாண்டிற்கு அதிகபட்சம் 10 மாதத்திற்கு மிகாமல் பராமரிப்புக் கட்டணம், மத்திய அரசால் தெரிவு செய்யப்பட்ட பட்டியலில் உள்ள கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர தொழிற்கல்வி நிறுவனங்களில் பயிலும் தகுதியுள்ள சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் தொழிற்கல்வி / தொழில் நுட்பக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்கள் புதியது / புதுப்பித்தல் கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பங்களை ஆன்லைன் (Online) www.momascholarship.gov.in என்ற இணைய முகவரியில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

# துருக்கியில் தொடரும் இஸ்லாமிய எழுச்சி



மௌலவி அபுல் ஹஸன் ஆலிம் பாஸி M.A.,

**அல்லாஹ்வின்** தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒரு முஃமின் இன்னொரு முஃமினின் கண்ணாடியாவான். (நூல்: அபூதாவூது) இஸ்லாமியர்களில் ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு கண்ணாடியாக இருப்பதைப் போன்றே இஸ்லாமிய நாடுகளில் ஒரு நாடு இன்னொரு நாட்டுக்கு கண்ணாடியே.

அந்நாடுகளில் ஒன்றில் எழுச்சியோ வீழ்ச்சியோ ஏற்பட்டால் அது எல்லா நாடுகளிலும் பிரதிபலிக்கவே செய்யும். இது யதார்த்த உண்மை.

### துருக்கியும் இஸ்லாமிய உலகமும்

சுமார் ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து இப்போது வரை முஸ்லிம் நாடுகளின் கண்ணாடியாகவும், முன்மாதிரி நாடாகவும் துருக்கியே இருந்து வருகிறது.

அப்பாஸிய கிலாஃபத் வீழ்ச்சியுற்ற பின்பு கி.பி. 1280 ஆண்டு உஸ்மான் கான் துருக்கி அரசை கிலாஃபத் அரசாக அறிவித்தார். அதற்கு பிறது சுமார் ஆறு நூற்றாண்டுகள் உலகின் போக்கினை தீர்மானிக்கும் சக்தியாக துருக்கியே இருந்து வந்தது.

ஐரோப்பாவின் இதயத்தில் துருக்கி அமையப் பெற்றதால் துருக்கியை தாண்டி அரபு நாடுகளையோ, ஏனைய இஸ்லாமிய பகுதிகளையோ ஐரோப்பியர்களால் நினைத்துக் கூட பார்க்க முடியாமல் இருந்தது.

துருக்கி கிலாஃபத்தும் நாமும்

துருக்கியில் கிலாஃபா அமைக்கப்பட்ட காலகட்டத்தில் தான் நமது இந்திய தேசத்திலும் இஸ்லாமியர்களின் ஆட்சிக்கு வித்திடப்பட்டது.

கல்வி, கலாச்சாரம், ஆன்மீகம், அரசமைப்பு ஆகியவற்றில் இந்தியாவின் இஸ்லாமியப் பேரரசு துருக்கியின் கிலாஃபா அரசையே சார்ந்திருந்தது. முகலாயர்களும் உதுமானியர்களும் மங்கோலிய இனத்தைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறே நமது இந்திய தேசத்தில் மார்க்க அறிஞர்கள் மௌலவி, மௌலானா என்ற வார்த்தைகளில் அழைக்கப்படுகின்றனர்.

இது துருக்கி ஆன்மீக அறிஞர் ஜலாலுத்தீன் ரூமி அவர்களின் மௌலவிய்யா ஆன்மீக வழித்தொடரை பின்னணியாக கொண்ட வார்த்தையாகும்.

கிலாஃபத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்களும், அதற்கு அப்பால் வாழ்ந்த முஸ்லிம்களும் துருக்கி கிலாஃபத்தினால் கௌரவமாக வாழ்ந்தனர். தங்களை துருக்கியர் என்றழைத்துக் கொள்வதை பெருமையாகக் கருதினார்.

நமது தமிழகத்தில் முஸ்லிம்களை (துருக்கன் எனும் சொல்லில் இருந்து மருவி வந்த) துலுக்கன் என்றழைப்பதும் இத்தகைய பின்னணியில் உருவான ஒன்று தான்.

### இஸ்லாமிய உலகில் துருக்கியின் தாக்கம்

கிலாஃபத் வாழ்ந்த காலத்தில் துருக்கி எவ்வாறு இஸ்லாமிய உலகில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியதோ அதே போன்று கிலாஃபத் வீழ்ச்சியுற்ற பின்பு துருக்கியில் அறிமுகப் படுத்தப்பட்ட மதச்சார்பற்ற கொள்கைகளும் இஸ்லாமிய உலகில் பிரதிபலிக்கவே செய்தன.

ஈராக், சிரியா, யமன், அல்ஜீரியா, ஜோர்டான், துனூஷியா, எகிப்து,லிபியா, சோமாலியா, சூடான் என இஸ்லாமிய உலகின் பெரும்பாலான நாடுகளின் அரசுகள் துருக்கியைப் பார்த்தே மதச்சார்பற்ற கொள்கையிலும்,நாத்திகத்திலும் விழுந்தன.

கவர் ஸ்டோரி

# எர்துகானும் இஸ்லாமிய எழுச்சியும்

**கிலாஃபத்** வீழ்ச்சியுற்ற பின்பு ஒருபுறம் ராணுவத்தின் அடக்குமுறைகள் இன்னொரு புறம் இடதுசாரிகளின் மதச்சார்பற்ற கலாச்சாரம் இரண்டுக்கும் மத்தியில் இஸ்லாமிய எழுச்சி என்பது துருக்கியில் எளிதாக இருக்கவில்லை.

பல்வேறு தடைகளுக்கு அப்பால் 20 ம் நூற்றாண்டின் மத்தியில் துருக்கியில் இஸ்லாமிய எழுச்சி வெற்றி பெறத் தொடங்கியது. அத்னான் முன்தரிஸ், நஜ்முத்தீன் எர்பகான் போன்ற இஸ்லாமிய இலட்சியவாதிகள் ஆட்சியை பிடித்தார்கள். எனினும் ராணுவத்தின் தலையீடுகளும், இடதுசாரிகளின் அரசியல் செல்வாக்கும் இஸ்லாமிய எழுச்சிக்கு தொடர்ந்து முட்டுக்கட்டையை ஏற்படுத்தி வந்தன.

1994 ம் ஆண்டு இஸ்தான்பூல் நகர மேயராக உதுமானிய கிலாஃபா பாரம்பரியத்தைச் சேர்ந்த ரஜப் தய்யிப் எர்துகான் பொறுப்பேற்ற நாள் சமகால இஸ்லாமிய உலகில் மிக முக்கியமான நாளாகும்.

2002 ம் ஆண்டு அவரது கட்சி ஆட்சியை பிடித்த பொழுது அதன் தாக்கம் அரபுலகிலும், ஏனைய இஸ்லாமிய நாடுகளிலும் இருக்கும் எதிர்பார்க்கப்பட்டது.

அல்லாஹ்வின் மகத்தான அருளால் அது பொய்யாகவில்லை. ஏற்கனவே எதிர்பார்த்தபடி 2010 ம் ஆண்டு இறுதியில் அரபுலகில் எழச்சி ஏற்பட்டது.

தொடரும் எர்துகானின் வெற்றி இஸ்லாமும் நாடும் ஒன்றுக்கொன்று எதிரானது. இஸ்லாம் சர்வதேசம் குறித்தே பேசுகிறது. ஆதலால், இஸ்லாமிய பற்றுடன் வாழும் ஒருவரிடம் நாட்டுப் பற்று இருக்காது. இது தேசியவாதிகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் மதச்சார்பற்ற நாத்திகர்களின் பிரச்சாரம்.

இஸ்லாமியவாதி ஒருவர் ஆட்சியைப் பிடித்தால் நாடு முன்னேறாது. நாட்டுக்கு நன்மை கிடைக்காது என்பதே இதன் நோக்கம்.

இதனடிப்படையில் தான் முஹம்மது முர்சியின் ஆட்சி எகிப்தில் ராணுவத்தினால் கவிழ்க்கப்பட்டது.

சமகால உலகில் இப்பிரச்சாரத்தை உடைத்தெறிந்தவர் எர்துகான். இஸ்லாம் நாடு இரண்டுக்கும் மத்தியில் சிறப்பான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி நாட்டை பன்மடங்கு முன்னேற்றிக் காட்டி, இஸ்லாமும் நாடும் ஒன்றுக்கொன்று முரண்பட்டது அல்ல என்று உலகுக்கு புரிய வைத்தவர் அவரே.

### எர்துகானும் சிறுபான்மையினரும்

பொதுவாக இஸ்லாமிய ஆட்சியோ, இஸ்லாமியவாதிகளின் ஆட்சியோ ஏற்பட்டால் அந்நாட்டில் வாழும் சிறுபான்மை மக்கள் அடக்கி ஒடுக்கப்படுவார்கள் என்றொரு அவதூறு பிரச்சாரம் பன்னெடுங் காலமாக செய்யப்பட்டு வருகின்றது.

எகிப்தில் இதைக் கூறித்தான் மதச்சார்பற்ற நாத்திகர்களும், கிறிஸ்தவர்களும் முர்சி ஆட்சிக்கெதிராக போராடினார்கள். முர்சியின் ஆட்சியை கவிழ்க்கவும் செய்தார்கள்.

நிகழ்கால உலகில் அதனை உடைத்தெறிந்தவர் எர்துகான். 2003 முதல் தொடர்ந்து அவருக்கே வாக்களித்து வருகிறார்கள் அங்குள்ள சிறுபான்மையின மக்கள்.

சுமார் 75 மில்லியன் மக்கள் தொகை கொண்ட துருக்கியில் பெரும்பான்மையினர் முஸ்லிம்களே.. ஆர்மினியன் கிறிஸ்தவர்கள் 65000 பேர், கிரேக்க கிறிஸ்தவர்கள் 15000, யூதர்கள் 20000 பேர் என்பது மதச் சிறுபான்மையினரின் எண்ணிக்கையாகும்.

உதுமானிய கிலாஃபத்தின் காலத்தில் எல்லா வகையான சுதந்திரத்துடனும் வாழ்ந்த சிறுபான்மையின மக்கள், கிலாஃபத்தின் வீழ்ச்சிக்கு பின்பு நாத்திகர்களின் ஆட்சியில் மிக மோசமாக நடத்தப்பட்டார்கள்.

மத மறுப்பாளரான கமால் அதாதுருக், இஸ்லாமியர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்ததைப் போன்றே யூதர்கள், கிறிஸ்தவர்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்தார்.

கமாலின் ஆட்சியில் 1936 ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சொத்து பறிமுதல் சட்டத்தின்படி ஆர்மினிய கிறிஸ்தவர்களின் 72 அறக்கட்டளைகள், யூதர்களின் 17 அறக்கட்டளைகள், கிரேக்க கிறிஸ்தவர்களின்

75 அறக்கட்டளைகள் பறிமுதல் செய்யப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களில் மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லறைகளும் உண்டு.

உதுமானியப் பேரரசின் கடைசிக் காலத்தில் அதிகாரம் ராணுவ தளபதிகளின் கரங்களில் இருந்தது. அச்சமயத்தில், ஆர்மினியர்களுக்கெதிரான படுகொலைகள் நடந்தன.

அவ்வாறே கமாலின் காலத்திலும், அவருக்கு பின்பு வந்த மதச்சார்பற்ற நாத்திகர்களின் ஆட்சிக் காலத்திலும், ராணுவத்தின் ஆட்சிக் காலத்திலும் பல்வேறு வகையில் சிறுபான்மையின மக்கள் அடக்கி ஆளப்பட்டனர்.

1955 ம் ஆண்டு கமால் அதாதுருக் பிறந்த (கிரீஸ் நாட்டில் சாலனோகிய்யா நகரில் உள்ள) இல்லம் கிரேக்க தீவிரவாதிகளால் தாக்கப்பட்டது.

துருக்கி ஊடகங்கள் இதனை முன்னிட்டு கிரேக்கர்களுக்கு எதிராக வெறுப்பு பிரச்சாரத்தில் ஈடுபட்டன. விளைவு கிரேக்கர்கள் மற்றும் ஏனைய சிறுபான்மையினருக்கு எதிராக கலவரம் வெடித்தது. பலர் கொல்லப்பட்டனர்.

**சிறுபான்மையினரின் காவலராக எர்துகான்**

பண்டைய உதுமானியப் பேரரசை நினைத்துப் பார்த்திடும் வகையில், எர்துகானின் ஆட்சியில் சிறுபான்மையின மக்கள் பாதுகாப்பாகவும், கௌரவத்துடனும் வாழ்ந்து வருகின்றனர்.

அத்துடன் கடந்த காலத்தில் நாத்திக அரசுகளால் பறிக்கப்பட்ட சொத்துக்களையும் சிறுபான்மை மக்களிடம் திருப்பி தந்துள்ளார் எர்துகான்.

2006-ல் பாராளுமன்றத்தில் சிறுபான்மையினர் சொத்துக்களை திருப்பி தரும் மசோதாவை நிறைவேற்றினார் எர்துகான். அதனை அப்போதைய (மதச்சார்பற்ற சிந்தனை கொண்ட) ஜனாதிபதி அஹ்மது நஜ்தத் செசர் (Ahmet Necdet Sezer) ரத்து செய்தார்.

பல்வேறு சட்டப் போராட்டங்களை மேற்கொண்ட எர்துகான், 2011 ம்ஆண்டு ஆகஸ்ட் 28-ல் இப்தார் விருந்தில் சிறுபான்மையினரின் அனைத்து சொத்துக்களும் திருப்பி தரப்படும் என்று அறிவித்தார். சொன்னதோடு அன்றி அதனை செய்யவும் செய்தார். மத மொழி இன சிறுபான்மையினரின் உள்ளத்தில் நீங்கா இடம் பிடித்தார். எர்துகானின் தொலைநோக்குப் பார்வை

இஸ்லாமிய அரசியலுக்கும் இஸ்லாமிய அரசுக்கும் மிகச் சிறந்த உதாரணமாக வாழ்பவர் எர்துகான். ஜஸ்டிஸ் அன்டு டெவலப்மென்ட் பார்ட்டி எனும் தனிக்கட்சியை தொடங்கிய பிறகு 2002 ல் அவர் சந்தித்த முதல் நாடாளுமன்ற தேர்தலிலேயே பெரும்பான்மை பலம் பெற்று ஆட்சியைப் பிடித்தார் அவர்.

துருக்கி மக்கள் இத்துணை நம்பிக்கை வைத்து அவரை தேர்ந்தெடுத்ததின் காரணம் எழுச்சி மிக்க அவரது பேச்சு, செயல்பாடு, சொன்னதை செய்து முடிக்கும் அவரது நம்பகத்தன்மை, அவரது தொலைநோக்குப் பார்வை, சிறுபான்மையினர் மீதான கரிசனம் ஆகியவையாகும்.

2002 முதல் தொடர்ந்து மூன்று முறை ஆட்சியை பிடித்து வரும் அவர், ஒவ்வொரு தேர்தலிலும் தேர்தல் வாக்குறுதியாக தந்தவற்றை நிறைவேற்றாமல் அடுத்த தேர்தலை அவர் சந்தித்ததில்லை.

2002-ம் ஆண்டு தரப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிய நிலையில்

**2024-ல் புதிய இஸ்லாமிய துருக்கி என்ற திட்டத்துடன் வீறுநடைபோட்டு வரும் அவரிடம் 2071 வரையிலான திட்டங்களும் இருக்கின்றன. அது 1000 ஆண்டு கால துருக்கியின் இஸ்லாமிய நாகரிகத்தை கட்டி யெழுப்பும் திட்டமாகும்.**

தான், 2007 ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலை சந்தித்தார். 2007 தேர்தலில் தந்த வாக்குறுதி களை நிறைவேற்றிய பின்பே 2011 நாடாளு மன்ற தேர்தலை சந்தித்தார்.

தனிநபர் ஆண்டு வருமானம் 25000 டாலர், பொருளாதார வலிமையில் முதல் பத்து நாடுகளில் ஒன்றாக ஆகுதல், 500 பில்லியன் டாலர் அளவுக்கு ஏற்றுமதியை அதிகப்படுத்துதல் ஆகியவை 2023-க்குள் அவர் செய்வதாக அறிவித்துள்ள வாக்குறுதிகள்.

2024-ல் புதிய இஸ்லாமிய துருக்கி என்ற திட்டத்துடன் வீறுநடைபோட்டு வரும் அவரிடம் 2071 வரையிலான திட்டங்களும் இருக்கின்றன. அது 1000 ஆண்டு கால துருக்கியின் இஸ்லாமிய நாகரிகத்தை கட்டி யெழுப்பும் திட்டமாகும்.

# இஸ்லாமிய உலகில் எர்துகானின்

**2011-ல்** அரபுலகில் தொடங்கிய இஸ்லாமிய எழுச்சிக்கு பத்தாண்டுகளுக்கு முன்பு துருக்கியில் எர்துகான் தொடங்கி வைத்த இஸ்லாமிய எழுச்சியே வித்திட்டது. இஸ்லாமிய எழுச்சி ஏற்பட்ட யமன், லிபியா, துனூஷியா குறிப்பாக எகிப்தில் எர்துகான் அதிகம் முன்னிறுத்தப்பட்டார்.

நவீன இஸ்லாமிய ஆட்சிக்கு எர்து கானின் ஆட்சியே முன்மாதிரியாக கூறப் பட்டது. எழுச்சிக்கு பின்பு 12-09-2011 அன்று எர்துகான் எகிப்து வந்த போது எகிப்தியர்கள் பிரமாண்ட வரவேற்பு தந்தனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் வழியெங்கும் கூடி நின்று அவரை வரவேற்றனர். மத்திய கிழக்கின் இஸ்லாமிய தலைவர் என்று எகிப்து பத்திரிக்கைகள் அவரை புகழ்ந்தன.

இக்வான்கள் அமைப்பும் எர்துகானை வரவேற்றது. எகிப்து எர்துகானின் இரண் டாவது நாடு என்றார்கள் இக்வான்கள்.

ஆறு அமைச்சர்கள், 200 தொழிலதி பர்கள் உடன் வந்த எர்துகான், எகிப்தின் பொருளாதார எழுச்சிக்கு துருக்கி உதவும் என்றார். (Source: http://edition.cnn.com sep 14, 2011)

மறுவருடம் 2012 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் எகிப்து வந்தார் எர்துகான். எகிப்து அதிபர் டாக்டர் முஹம்மது முர்சி எர்துகான் இடையேயான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு அப்போது நடந்தது.

எர்துகான், முஹம்மது முர்சி, ஈரானின் அஹ்மது நிஜாத் என இஸ்லாமிய உலகின் இரும்பு மனிதர்களின் கூட்டணி 2012 ம் ஆண்டு காசா இஸ்ரேல் போரில் இஸ்ரேல் தோற்று பின்வாங்கிட காரணமானது.

எகிப்து, சிரியா, பாலஸ்தீன விவகா ரங்களில் திடமான முடிவுகளை எடுத்திடும் முஸ்லிம் ஆட்சியாளர் எர்துகான் மட்டுமே..

முர்சி ஆட்சியை கடந்த 2013 ம் ஆண்டு எகிப்து ராணுவம் டிஸ்மிஸ் செய்ததை கடுமை யாக எதிர்த்தார் எர்துகான். இஸ்ரேல், அமெ ரிக்கா, ரஷ்யா, சவூதி, துபாய், பஹ்ரைன் நாடுகள் ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னணியில் இருந்த போதிலும் எர்துகான் அதனை சதி என்றே வர்ணித்தார்.

எகிப்தில் இருந்து தூதரை வாபஸ் பெற்ற அவர், இன்று வரை எகிப்துடன் உறவு எதனையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. கடந்த 24-03-14 அன்று எகிப்து கிரிமினல் கோர்ட் 529 இக்வான்களுக்கு தூக்கு தண் டனை விதித்து தீர்ப்பளித்தது.

தீர்ப்பு வந்த அன்று எகிப்து ராணுவ ஆட்சியும், ராணுவ அரசின் நீதித்துறையும் நீதியை கேலிக்குள்ளாக்கி விட்டன என்றார் எர்துகான்.

அத்தீர்ப்புக்கு எதிராக இஸ்லாமிய உலகில் நாடாளுமன்றத்தில் கண்டன தீர்மானம் நிறைவேற்றிய ஒரே நாடு துருக்கி மட்டுமே. நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் ஆதரித்து நிறைவேற்றப்பட்ட அத்தீர்மானத்தை ஐரோப்பிய யூனியனுக்கு அனுப்பி வைத்தார் எர்துகான்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முர்சி தான் எகிப்தின் அதிபர் என்று இன்று வரை கூறி வருகிறார் எர்துகான். ராணுவத்தின் ஆட்சிக் கவிழ்ப்பு, ராணுவ டாங்கிகளின் அணிவகுப்பில் நடந்த பொதுவாக்கெடுப்பு, தற்பொழுது எகிப்தில் மே மாதம் அறிவிக்கப் பட்டிருக்கும் அதிபர் தேர்தல் எல்லாமே சட்ட விரோதமானவை என்பதில் உறுதியாக நிற்கும்

அவர், உலக அரங்கில் அதனை உரத்துக் கூறியும் வருகிறார். சிரியா விவகாரத்தில் எர்துகானின் இஸ்லாமிய சகோதரத்துவம்

சிரியாவில் உள்நாட்டுப் போர் தொடங்கிய காலத்தில் இருந்து கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து சிரியாவில் போராடும் போராளிகளுக்கு உதவி செய்து வரும் நாடுகளில் ஒன்று துருக்கி.

ஆரம்பத்தில் போராளிகளுக்கு சவூதி உதவி செய்த நிலையில், கடந்த மார்ச் மாதம் போராளிகள் அமைப்புகளில் சிலவற்றை பயங்கரவாத இயக்கமாக அறிவித்து போராளிகளுக்கான உதவியில் தடைக்கல்லை ஏற்படுத்தி விட்டது சவூதி.

ஆனால் இன்று வரை போராளிகளுக்கு நிறுத்தாமல் உதவி செய்து வரும் நாடு துருக்கி மட்டுமே. அது மட்டுமல்ல துபாய் போன்ற நாடுகள் சிரியா அகதிகளை ஏற்க மறுத்த நிலையில், தாயுள்ளத்துடன் இன்று வரை சிரியா அகதிகளுக்கு கதவுகளை திறந்து வைத்த நாடும் துருக்கியே.

2011ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8000 பேராக இருந்த சிரியா அகதிகளின் எண்ணிக்கை இவ்வருடம் (2014) ஏப்ரல் 20 வரை 7,15306 ஆக உள்ளது. ஒவ்வொரு நாளும் அகதிகளாக துருக்கி வருவோர் எண்ணிக்கை



கூடிக் கொண்டே உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

அகதிகளின் எண்ணிக்கை மில்லியன்களை தாண்டிய நிலையில், எல்லை மூடப் படுமா? என்று எர்துகானிடம் நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு எர்துகான் இவ்வாறு பதிலளித்தார். எங்களின் சகோதரர்களுக்கு கதவுகளை நாங்கள் திறந்தே வைத்திருப்போம். உயிரை காப்பாற்றிக் கொள்ள வருவோருக்காக கதவுகளை திறக்காமல் இருப்பது மக்களை கொலை செய்வதற்கு சமம். துருக்கி மனித நேயமற்ற செயல்களில் ஒருக்காலும் ஈடுபடாது என்றார் எர்துகான்.(அல்ஜஸீரா 22-04-2014)

துருக்கி முகாம்களில் சிரியா முஸ்லிம்கள் மட்டுமல்ல.. சிரியாவில் வாழ்ந்த குர்துகள், ஆர்மினியர்கள், கிறிஸ்தவர்கள் என எல்லா இனத்தவர்களும் உள்ளனர். மதப்பாகுபாடின்றி எல்லா மக்களுக்கும் கதவுகளை திறந்து வைத்துள்ளது துருக்கி.

**அனாதைகளுக்கு வீடுகள்**

சிரியா உள்நாட்டுப் போரில் எண்ணற்ற குழந்தைகள் அனாதைகளாக ஆகியுள்ளன. துருக்கி முகாம்களில் தங்கியுள்ள 12 வயதுக்கு மேற்பட்ட ஆண் - பெண் அனாதை குழந்தைகளுக்கு சொந்த வீடு கட்டித் தரப்படும் என்று அறிவித்தது துருக்கி அரசு. இது சமகால உலகில் எந்த நாடும், எந்த அரசும் செய்யாத தாகும்.

**அண்ணல் நபி (ஸல்) வழியில்அகதிகளை பயன்படுத்தும் எர்துகான்**

அகதிகள் முகாம்களில் வாழ்பவர்களுக்கு உணவு, நீர், உடை, கழிப்பறைகள் என எல்லாவற்றையும் செய்து தந்து, ஐ.நா.வின் அகதிகள் நலத்துறையின் பாராட்டைப் பெற்ற எர்துகான் அரசு, அகதிகளில் மார்க்க அறிஞர்கள், கல்வியாளர்கள் ஆகியோரை கல்வித் திட்டங்களுக்கு பயன்படுத்தி வருகிறது.

**நாத்திகன் கமால் அதாதுருக்கின் அரபு மொழிக்கு எதிரான கொள்கையால் துருக்கியர்கள் அரபு மொழி உச்சரிப்பையே மறந்து போனார்கள். துருக்கியர்களின் திருக் குர்ஆன் ஓதலில் பல எழுத்துக்களில் எழுத்து உச்சரிப்பு பிழை ஏற்பட்டு வந்தது. இதன் விளைவு சர்வதேச திருக்குர்ஆன் கிராஅத் போட்டிகளில் அவர்களால் கலந்து கொள்ள இயலவில்லை.**

ளாத் என்பது அரபு மொழி எழுத்துக்களில் ஒன்று. அரபுகள் மட்டுமே இதனை ளாத் என்று உச்சரிப்பார்கள். உர்து, துருக்கி மொழி பேசுபவர்கள் 'ளாத்' எழுத்தை 'சாத்' என்றே உச்சரிப்பார்கள். இதனால் தான் அரபு மொழிக்கு 'ளாத் மொழி' என்று கூறப்படுகிறது. நாத்திகன் கமால் அதாதுருக்கின் அரபு மொழிக்கு எதிரான கொள்கையால் துருக்கியர்கள் அரபு மொழி உச்சரிப்பையே மறந்து போனார்கள். துருக்கியர்களின் திருக்குர்ஆன் ஓதலில் பல எழுத்துக்களில் எழுத்து உச்சரிப்பு பிழை ஏற்பட்டு வந்தது. இதன் விளைவு சர்வதேச திருக்குர்ஆன் கிராஅத் போட்டிகளில் அவர்களால் கலந்து கொள்ள இயலவில்லை.

100 ஆண்டு காலமாக நிலவி வந்த இப்பிரச்சினையை தற்போது துருக்கியில் தஞ்சமடைந்துள்ள ஆண் பெண் திருக்குர்ஆன் அறிஞர்களை பயன்படுத்தி சரிப்படுத்தி விட்டார் எர்துகான்.

அங்காரா, இஸ்தான்பூல், இஸ்மிர் என பல்வேறு நகரங்களில் உள்ள பல்கலைக் கழங்கள், கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் மற்றும் மஸ்ஜிதுகளில் அகதிகளில் உள்ள ஆண் பெண் அறிஞர்கள் திருக்குர்ஆன் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமல்ல.. ஆயிரக்கணக்கான துருக்கி சிறுவர் சிறுமியர்கள், இளைஞர்கள், இளம் பெண்கள், பெரியவர்கள், மூதாட்டிகள் காலையிலும், மாலையிலும் சிரியா அகதிகள் முகாம்களுக்கு வந்து திருக்குர்ஆன் பாடம் படித்து விட்டு செல்கின்றனர்.

இதனால் அகதிகளின் பொருளாதாரம் முன்னேறியிருப்பதுடன், அவர்களுக்கும் துருக்கி மக்களுக்கும் இடையே பாசப் பிணைப்பும் ஏற்பட்டிருக்கின்றது.

இது பத்ரு போர்க் களத்தில் கைது செய்யப்பட்ட முஷ்ரிக்குகளிடம் மதீனா சிறுவர்கள் எழுதப் படிக்க கற்பதற்கு ஏற்பாடு செய்த நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியை அடிப்படையாக கொண்டதாகும்.

# சூழ்ச்சிகளை வென்று அதிபராகிறார் எர்துகான்

**உலகெங்கும்** வாழும் இஸ்லாமியர்களுக்கும், இஸ்லாமிய இலட்சியவாதிகளுக்கும் ஆதரவுக் கரம் நீட்டி வருபவர் துருக்கி பிரதமர் ரஜப் தய்யிப் எர்துகான். அதில் கிஞ்சிற்றும் அவர் தயக்கம் காட்டியதில்லை. யாருக்கும் பயந்ததும் இல்லை.

ராணுவ ஆட்சியை எதிர்த்து போராடி வரும் இக்வான் மாணவர்களை அல் அஸ்ஹர் உட்பட எகிப்து பல்கலைகழகங்கள் ஆயிரக் கணக்கில் நீக்கின. அதற்கு எர்துகான் இப்படி பதிலடி தந்தார்.

நீக்கப்பட்ட எகிப்து மாணவர்களுக்காக துருக்கி பல்கலைகழகங்கள் கதவுகளை திறந்து வைத்துள்ளன. அவற்றில் அவர்கள் கட்டணமின்றி இலவசமாக கல்வி கற்கலாம். ( Source: http://almesryoon.com ஏப்ரல் 6)

இவ்வாறு இஸ்லாமிய இலட்சியவாதிகளுக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக நிற்கும் எர்துகானுக்கு எதிராகவும் சூழ்ச்சிகள் பின்னப்பட்டன.

**தக்சீம் சதுக்கம் ஆர்ப்பாட்டம்**

கடந்த 2013 ம் ஆண்டு ஜூன் மாதம் எகிப்திலுள்ள தஹ்ரீர் சதுக்கத்தில் எகிப்து அதிபர் டாக்டர் முர்சி ஆட்சிக்கு எதிராக நாத்திகர்கள், மதச்சார்பற்றவர்கள், கிறிஸ்தவர்கள், உள்மார்க்க விவகாரங்களை இலட்சியமாக கொண்டு வாழும் ஸலஃபிகள் போராடினார்கள்.

அதே சமகாலத்தில் இஸ்தான்பூல் நகரில் உள்ள தக்சீம் சதுக்கத்தில் இலட்சக்கணக்கில் மக்கள் திரட்டப்பட்டனர். அதற்கு முன்னதாக மதுவுக்கும், பொது இடங்களில் ஆண் பெண் அநாகரிகமாக நடப்பதற்கும் எர்துகான் தடை விதித்திருந்தார்.

இதனை சுதந்திரம் என்ற பெயரில் கற்கால நாகரிகத்தை விரும்பும் நாத்திகர்கள் கடுமையாக எதிர்த்தனர். துருக்கி உதுமானிய கால பாரம்பரியத்தை நினைவுபடுத்தும் வகையில் தக்சீம் சதுக்கத்தில் அருங்காட்சியகமும், பள்ளிவாசலும் அமைக்கப்படும் என்று அறிவித்தார் எர்துகான்.

எகிப்து பாணியில் தக்சீம் சதுக்கத்தில் மக்கள் திரட்டப்பட்டனர். இரகசியமான முறையில் ராணுவத்தின் உதவியும் கோரப் பட்டது.

விரைந்து செயல்பட்ட எர்துகான் போராட்டத்தை சமாளித்தார். ஆட்சி கவிழாமல் காப்பாற்றினார்.

**ஊழல் புகார்**

கடந்த (2013) ஜூன் மாதம் மக்களை திரட்டி எர்துகானை வீழ்த்திட நடந்த முயற்சிகள் தோல்வியுறவே அதிகாரிகளை வைத்து எர்துகானுக்கு எதிராக சதிகள் அரங் கேற்றப்பட்டன.

அமெரிக்காவிலுள்ள பெல்சில்வேனியா நகரில் வசித்து வருபவர் துருக்கி இஸ்லாமிய அறிஞர் பத்ஹுல்லாஹ் குலன். இவர் துருக்கி யில் ஏராளமான தனியார் பள்ளிக்கூடங்களை நடத்தி வருகிறார்.

அனைவருக்கும் தரமான இலவச கல்வி எனும் திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள தனியார் பள்ளிக்கூடங்களை குறைக்க ஆவண செய்தார் எர்துகான். இது பள்ளிக்கூடங்களை நடத்தி வந்த குலனுக்கு பிடிக்காமல் போனது.

நிலைமையைப் பயன்படுத்தி குலனை வைத்து எர்துகானுக்கு எதிராக காய்கள் நகர்த்தப்பட்டதன. குலன் ஆதரவு அதிகாரிகள் கடந்த டிசம்பர் மாதம் (2013) எர்துகானின் அமைச்சரவை சகாக்களின் வீடுகளில் சோதனை நடத்தினர்.

இரண்டு அமைச்சர்களின் மகன்கள், வங்கி அதிகாரி உட்பட 24 பேர் கைது செய்யப் பட்டனர். எர்துகானின் மகன் பிலால் எர்து கானை கைது செய்வதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

உதுமானிய கலீஃபா இரண்டாம் அப்துல் ஹமீது ஆட்சிக் காலத்தில் நடந்ததைப் போன்று நாட்டுக்குள் இன்னொரு நாடு நடத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் அனைத்தையும் முறியடித்த எர்துகான் இதனை வெளிநாட்டு சதி என்று வர்ணித்தார். இதில் அமெரிக்காவின் தலையீடு அப்பட்டமாக தெரிந்தும் அமெரிக்காவுடன் உரசல் போக்கினை எர்துகான் கடைப்பிடிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ராணுவப் புரட்சிக்கு முயற்சி

முதலில் அப்பாவி பொதுமக்களைப் பயன்படுத்தியும், இரண்டாவது முறை அதிகாரிகளைப் பயன்படுத்தியும் தோற்றுப் போன இஸ்லாமிய விரோதிகள் ராணு வத்தைப் பயன்படுத்திட முடிவு செய்தனர்.

கடந்த ஜனவரி மாதம் (2014) ராணுவப் புரட்சிக்கு திட்டமிடப்பட்டது. சிரியா எல்லையில் அதனா நகரில் இளநிலை ராணுவ அதிகாரிகள் மற்றும் சிவில் அதிகாரிகளை திரட்டப்பட்டது.

அவர்களிடமிருந்து செல்போன்கள் பறிக்கப்பட்டன. உளவுத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்படாமல் நடந்த கூட்டம் குறித்து கேள்விப்பட்டு அவ்விடத்துக்கு புறப்பட்டனர் உளவுத்துறை அதிகாரிகள். ஆனால் இடையில் செயற்கை போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தப் பட்டு அவர்கள் தாமதம் செய்யப்பட்டனர். பாதையில் ராணுவ டிரக்குகள் வழிமறித்து நிறுத்தப்பட்டன. எனினும் உளவுத்துறை ஒத்துழைக்காததால் ராணுவப் புரட்சி தோல்வி யடைந்தது.

**தேர்தல் நெருங்கிய சமயத்தில் தக்சீம் சதுக்கத்தில் மோதலில் காயமுற்று கோமாவில் இருந்த இளைஞர் ஒருவர் இறக்க வைக்கப்பட்டார். அவரது உடலை வைத்து போராட்டமும் நடத்தப் பட்டது. தொடர்ந்து எர்துகானுக்கு எதிராக ட்விட்டரும், யூ-ட்யூபும் களத்தில் குதித்தன. வெளிநாட்டுப் பயணத்தில் இருந்து எர்துகான், தமது மகன் பிலாலிடம் பேசியதாக போலியான ஒலிநாடா ஒன்றினை அவ்விரண்டும் பரப்பின.**

பொதுவாக ஒருநாட்டில் ராணுவப் புரட்சி நடக்க வேண்டும் எனில், அதற்கு உளவுத்துறையின் ஒத்துழைப்பு கண்டிப்பாக தேவை. நமது இந்திய நாட்டில் வி.கே. சிங் ராணுவ தளபதியாக இருந்த போது முயற்சிக்கப்பட்ட ராணுவ புரட்சி தோல்வி யடைந்ததற்கு உளவுத்துறையின் ஒத்துழைப் பின்மையே காரணம்.

எர்துகானைப் பொருத்தவரை உளவுத் துறையிலும், பாதுகாப்புத் துறையிலும் எவ்வ ளவோ மாற்றங்களை செய்து விட்டார். ஆதலால் தான் ஜனவரியில் அவருக்கு எதிராக முயற்சிக்கப்பட்ட ராணுவ புரட்சி தோல்வி யடைந்தது.

ஏற்கனவே 2003-ல் ராணுவப் புரட்சி சதி வழக்கில் தளபதிகள், அட்மிரல்கள், ஜென ரல்கள் 49 பேர் உட்பட 300 சிறைத் தண்டனை பெற்றுள்ள நிலையில், இவ்வாண்டு ஆட்சிக் கவிழ்ப்பு சூழ்ச்சியில் மூத்த ராணுவ அதிகாரி கள் யாரும் ஈடுபடவில்லை. இளநிலை அதிகா ரிகளில் இருவர் மட்டுமே இதில் முயற்சித்தனர். அவ்விருவரும் கோர்ட் மூலம் பணி நீக்கம் செய்யப்பட்டு கைது செய்யப் பட்டனர்.

**ட்விட்டரும்- யு ட்யூபும்**

எர்துகானின் சகாப்தம் முடிவுக்கு வந்து விட்டதாக ஊடகங்களும் எதிர்க்கட்சிகளும் பிரச்சாரம் செய்து வந்த நிலையில், கடந்த மார்ச் 30-ந் தேதி துருக்கியில் உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டது.

எர்துகானின் மீதும், அவரின் குடும்பத் தார்களின் மீதும் தொடர்ந்து குற்றச்சாட்டுகள் வீசப்பட்டன. தேர்தல் நெருங்க நெருங்க எதிர்க்கட்சிகளின் பிரச்சாரம் எல்லை மீறியது. சவூதி, எகிப்து, துபாய் பத்திரிக்கைகள் எர்து கானின் வீழ்ச்சி தொடங்கி விட்டதாக கொக்க ரித்தன.

இதில் வேதனைக்குரிய விஷயம் இஸ் லாமிய அறிஞர் குலனின் ஆதரவாளர்கள் வீடு வீடாக சென்று எர்துகானுக்கு எதிராகவும், மதச்சார்பற்ற எதிர்க்கட்சிக்கு ஆதரவாகவும் பிரச்சாரம் செய்தனர்.

தேர்தலுக்கு நெருக்கமான சமயத்தில் 2013-ம் ஆண்டு தக்சீம் சதுக்கத்தில் மோதலில் காயமுற்று கோமாவில் இருந்த இளைஞர் ஒருவர் இறக்க வைக்கப்பட்டார். அவரது உடலை வைத்து போராட்டமும் நடத்தப் பட்டது. தொடர்ந்து எர்துகானுக்கு எதிராக ட்விட்டரும், யு-ட்யூபும் களத்தில் குதித்தன. வெளிநாட்டுப் பயணத்தில் இருந்து எர்துகான், தமது மகன் பிலாலிடம் பேசியதாக ஒலிநாடா ஒன்றினை அவ்விரண்டும் பரப்பின. ஊழல் சோதனையில் இருந்து தப்பித்து ஓடுமாறு மகனுக்கு எர்துகான் உபதேசம் செய்வதாக அதில் பதிவாகியிருந்தது.

இது உச்சகட்டத்தை அடைந்த பொழுது எர்துகான் ஒன்றுமில்லாமல் துடைத்தெறியப் படுவார் என்று ஊடகங்கள் தேர்தல் கணிப்பு முடிவுகளை வெளியிட்டன.

**முறியடித்தார் எர்துகான்**

இது உச்சகட்டத்தை அடைந்த பொழுது ட்விட்டரும், யு-ட்யூபும் தடை செய்யப் பட்டன. வெளியிடப்பட்ட ஒலிநாடா போலி என்பதை நிரூபித்த எர்துகான், இத்தேர்தலில் தோற்றால் அரசியலை விலகுவதாக அறிவித்தார்.

ஏற்கனவே வெளிநாடுகளின் சதியாலும், நாத்திகர்களின் அடக்குமுறையாலும் கிலா ஃபத்தையும், இஸ்லாமிய உலகின் தலைமை யையும் இழந்தவர்கள் துருக்கி மக்கள்.

மீண்டும் வெளிநாடுகளின் சதிகளுக்கு இஸ்லாமிய இலட்சியவாதி எர்துகானை பலிகொடுக்க அவர்கள் விரும்பவில்லை. அத்துடன் எதிர்க்கட்சிகளின் அநாகரிகமான பிரச்சாரங்களை அவர்கள் வெறுக்கவே செய்தார்கள். விளைவு தேர்தலில் வெற்றி பெற்றார். கடந்த தேர்தலை காட்டிலும் அவரது கட்சிக்கு அதிகம் வாக்குகள் கிடைத்தன. அதிபர் ஆட்சியும் எர்துகானின் நோக்கமும்

வருகிற ஆகஸ்டு மாதம் துருக்கியில் முதல் முறையாக அமெரிக்காவில் இருப்பதைப் போன்று பொதுமக்கள் அதிபரை தேர்வு செய்யும் அதிபர் தேர்தல் அறிவிக்கப்பட் டுள்ளது. வலுவான ஆட்சி, திடமான தலைமை, புதிய அரசியல் சாசனம் ஆகிய வற்றுக்காகவே அதிபர் ஆட்சியை எர்துகான் முன்னிறுத்து கிறார். தற்போதைய உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் அவருக்கு சாதகமாக ஆகிவிட்ட தால், அதிபர் தேர்தலில் எளிதாக அவர் வெல்வார் என்று கணிக்கப்படுகிறது.

# எர்துகானின் வெற்றியும் இஸ்லாமியவாதிகளின் எழுச்சியும்

**எர்துகான்** ஜெயிப்பாரா? தோற்பாரா? என்று உலகெங்கும் வாழும் இஸ்லாமிய இலட்சியவாதிகள் கவலைப்பட்டு வந்த நிலையில், எர்துகானின் வெற்றி இஸ்லாமிய வாதிகளுக்கு உற்சாகத்தை தந்துள்ளது.

பாலஸ்தீனம், எகிப்து, துனூஷியா, யமன், கிரிமியா, பர்மா, பால்கன் உட்பட பல நாடுகளில் எர்துகானின் வெற்றி இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. பாலஸ் தீனத்தில் மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசலுக்கு முன்பு எர்துகான், கத்தார் அமீர் தமீம், அவரது தந்தை ஹம்து, காசா பிரதமர் இஸ்மாயீல் ஹனியா ஆகியோரின் படங்கள் வைக்கப்பட்டு, இவர்களை அல்லாஹ்வின் இல்லம் எதிர்பார்க்கின்றது என்று எழுதப்பட்டிருந்தது.

முன்னதாக உள்ளாட்சித் தேர்தல் முடிவு வந்த பின்பு கட்சி அலுவலகத்தின் பால்கனியில் தொண்டர்களின் வாழ்த்துக்களை பெற்றார் எர்துகான். அப்போது எகிப்து இக்வான்களின் அடையாளமான பெருவிரலை மடக்கி நான்கு விரலை உயர்த்திக் காட்டியவாறு இவ்வாறு பேசினார்.

### துருக்கிக்கு போலித்தனமில்லாத எதிர்க்கட்சிகள் தேவைப்படுகின்றன.

துருக்கி மக்களே! எகிப்து, சிரியா, பால்கன், பாலஸ்தீனத்தில் வாழும் உங்களின் சகோதரர்கள் இவ்வெற்றியை தங்களின் வெற்றியாக பார்க்கின்றார்கள்.

நான் இதற்கு முன்னால் சொல்லியிருந்தேன். இத்தேர்தலில் தோற்றால் அரசியலை விட்டு விலகுவேன் என்று. நீங்கள் எனக்கு வாய்ப்பளித்துள்ளீர்கள். (மிடில் ஈஸ்ட் மானிட்டர் 1-04-14)

### எர்துகானுக்கு கர்ளாவி வாழ்த்து

எர்துகானுக்கு சர்வதேச இஸ்லாமியப் பேரறிஞர் டாக்டர் யூசுப் அல்கர்ளாவி அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார் நாங்கள் அல்லாஹ்வுக்கு சஜ்தா செய்து நன்றி செலுத்தினோம். உங்களின் மீது தனது அருளை அல்லாஹ் முழுமையாக்கிட நாங்கள் உளப்பூர்வமாக துஆ செய்தோம்.

மேலும் அதில் கர்ளாவி கூறியிருப்பதாவது, நான், எனது மனைவி, எனது பிள்ளைகள், எனது பேரப்பிள்ளைகள், என்னை சுற்றி இருந்தவர்கள் மற்றும் எல்லா இக்வான்களும் நீங்கள் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று கடுமையாக துஆ செய்தோம். உங்களுக்கு வெற்றி கிடைத்து, உங்களின் எண்ணங்கள் நிறைவேறிடவும், இலட்சியத்தை நீங்கள் அடைந்திடவும் அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று அல்லாஹ்விடம் அனுதினமும் மன்றாடினோம்.

அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். உயர்வும் கீர்த்தியும் அவனுக்குரியதே. அவனே தனது வாக்குறுதியை நிறைவேற்றி தனக்காக உழைப்பவருக்கு வெற்றியை தருகிறான். தனது எதிரிகளை தோற்கடிக்கின்றான். தனது படையினரை மேன்மைபடுத்துகிறான்.

உங்களுக்கு வெற்றியை தந்த அல்லாஹ்வுக்கு நாங்கள் சஜ்தா செய்து நன்றி செலுத்தினோம். மலக்குமார்களைக் கொண்டும், ஜிப்ரில் (அலை) அவர்களைக் கொண்டும் உங்களை அல்லாஹ் பலப்படுத்துவானாக..

துருக்கி நாடு முன்னேறுவதற்கும், அதன் மூலம் இஸ்லாமும், முஸ்லிம்களும் பயனடைவதற்கும் உங்களுக்கு அல்லாஹ் உதவி செய்வானாக! பாவிகள் வெறுத்தாலும் சத்தியத்தை அல்லாஹ் வெற்றி பெறச் செய்கிறான். அசத்தியத்தை அவனே தோற் கடிக்கின்றான்.

(Source: http://www.raialyoum.com 02-04-2014 )

மார்க்கம் பேசி, இஸ்லாமிய எழுச்சியோ, இஸ்லாமிய ஒற்றுமையோ ஏற்படாதவாறு முஸ்லிம்களை திசை திருப்பும் குழப்பவாதிகள் கிஞ்சிற்றும் இல்லாத நாடு துருக்கி. துருக்கி முஸ்லிம்களைப் பொருத்தவரை முஸ்லிம்களில் இடதுசாரிகள் இஸ்லாமியவாதிகள் என இரண்டு பிரிவினர் தான் இருந்தனரே தவிர இரண்டுக்கும் மத்தியில் உள்மார்க்க விவகாரங்களை பேசி இஸ்லாத்தின் பெயரால் முஸ்லிம்களை பிளவுபடுத்திடும் மூன்றாவது பிரிவினர் இருக்கவில்லை.

●

# அறிவுத்துறையும் முஸ்லிம்களும்

**சிறப்புக்கட்டுரை**

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்....

இறைவா! அறிவுஞானத்தை எனக்கு அதிகப்படுத்துவாயாக! (அல்குர்ஆன் 20:114)

அறிவைத் தேடுங்கள்

அஃது காணாமல் போன ஒட்டகம்.

அறிவைத் தேடும் முயற்சியில் ஒருவன் செய்யும் பயணம் இறைவனின் பாதையில் செய்யும் பயணம். அவன் அதிலிருந்து திரும்பும் வரை.

இவையெல்லாம் இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அறிவைப் பெறுவதற்கு ஊக்கந்தரும் வகையில் எடுத்தியம்பிய உன்னத வரிகள்.

அத்தோடு நில்லாமல் இப்படியும் கட்டளை இட்டார்கள். அறிவைத் தேடுங்கள். ஏனெனில், அறிவைத் தேடுபவன் இறை வணக்கத்தில் ஈடுபடுபவனாவான். (இனி) அந்த அறிவைப் பரப்புபவன்அல்லாஹ்வை துதிக்கிறான். அல்லாஹ்வை (திக்ரு செய்கிறான்) அறிவைத் தேடுபவன் அல்லாஹ்வைப் புகழ்கின்றான். அதைப் பெற முடியாதவனுக்குக் கற்றுத் தருபவன் இல்லாதவனுக்கு தர்மங்களைச் செய்கின்றான். அதனை ஊட்டுபவன் பயபக்தி மிக்கதொரு செயலைச் செய்கிறான்.

நபிமொழித் தொகுப்பு (புகாரி, முஸ்லிம்)

அறிவைத் தேடிப் பயணம் செய்யும் மனிதருக்கு அல்லாஹ் சுவனப் பாதையை இலேசாக்குவான். (நூல்: முஸ்லிம்)

கல்வி என்ற சொல்லுக்குப் பதிலாக இங்கே நாம் அறிவு என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கின்றோம்.

ஏனெனில் 'இல்ம்' என்ற அரபிச் சொல் தான் திருக்குர்ஆனில் பயன்படுத்தப்படுகின்றது.

இந்தச் சொல்லுக்குப் பொருள் கல்வி என்பதை விட அறிவு என்பதே பொருத்தமானது. அறிவிலிருந்து பெறப்படுவது ஞானம் (wisdom) இதையும் திருக்குர்ஆன் 'ஹிக்மா' என்ற சொல்லால் சுட்டிக்காட்டுகின்றது.

இந்த ஞானத்தைப் பெறுவதுதான் கல்வியின் அறுதி இலக்காக அமைந்திட வேண்டும்.

இந்த ஞானம்தான் நிலைக்கும் நிரந்தரமாகப் பயன்படும் மனித இனம் எதிர் கொள்ளும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு கல்வியால் பெறப்பட்ட அறிவு அதனால் பெறப்பட்ட ஞானம் தான் பயன்படும் மனிதனுக்கு எல்லாக் காலங்களுக்கும் உதவும்.

இந்த ஞான அறிவும், ஞானமும் மனிதனுக்குப் பயன்படும் அறிவில் புதிய கண்டுபிடிப்புகளையும், புதிய உத்திகளையும் கண்டுபிடித்துத் தந்திடுமே ஆனால் அது இறைவனின் வழியில் செய்யப்படும் மிகப் பெரும் வழிபாடு - வணக்கம் ஆகும். அல்லாஹ்விடம் அளப்பரிய கூலிகளைப் பெற்றுத் தந்திடும்.

இதே அறிவும், ஞானமும் மனிதனை அழிக்கும் அணுகுண்டுகளாயும் 'ஆந்த்ராக்ஸ்'களையும் கண்டுபிடித்துத் தந்திடுமேயானால், அது இறைவனின் சாபத்திற்குரியதாகவும் மனித இனத்திற்கு எதிரானதாகவும் கருதப்படும். இந்த ஞானி மறுமையில் இருக்குமிடம் வெந்நரகமாகும்.

இந்த அறிவையும் ஞானத்தையும் பரப்புவதுதான் கல்வி.

Collection of information is knowledge. Interpreting the knowledge and driving conclusion and formulae is wisdom.Dessimination of knowledge and wisdom is education.

இப்போது கல்வி என்பது வியாபாரச் சரக்காக ஆகிவிட்டதால், நாம அறிவு என்ற

சொல்லைப் பயன்படுத்துகிறோம்.

### இஸ்லாமிய உலகில் அறிவும் ஞானமும்

இஸ்லாம் அறிவையும் ஞானத்தையும் மனித இனத்தின் நன்மைக்கே பயன்படுத்திட வேண்டும் என அறிதியாக அறிவுறுத்தியது.

அதனால் தொடக்க நாள்களில் முஸ்லிம்கள் (இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள்) அற்புதமான கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்து உலகுக்கு - மனித இனத்திற்கு ஒட்டுமொத்தமாக அவற்றை அர்ப்பணித்தார்கள்.

மனித இனத்தை ஒட்டுமொத்தமாக அழிக்கும் ஆயுதங்களை அவர்கள் கண்டுபிடிக்க அந்த அறிவையும் ஞானத்தையும் பயன்படுத்தவில்லை.இ காரணம், அறிவையும் ஞானத்தையும் தவறாகப் பயன்படுத்தினால் அவர்கள் மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் நிச்சயமாக இறைவனுக்குப் பதில் சொல்லியாக வேண்டும்.

ஏனெனில், இஸ்லாத்தின் பார்வையில் எப்படி ஒருவனுக்கு வழங்கப்பட்ட செல்வம் அல்லாஹ்வின் அருட்கொடையோ அதே போல் ஒருவனிடமுள்ள திறமையும் அறிவும் ஞானமும் அல்லாஹ்வால் வழங்கப்பெற்ற அருட்கொடையே!

வழங்கப்பெற்ற திறமையை அறிவை ஞானத்தை அப்படி அவன் பயன்படுத்தினான் என்பது குறித்து நிச்சயமாக கேள்வி கேட்கப் படுவான்.

அதனை அவன் நேரான வழியில் ஒட்டுமொத்த மனிதஇனத்திற்குப் பயன்படுத்தியிருந்தால் நிச்சயமாக அவன் நற்கூலிகளை அதாவது சொர்க்கத்தைப் பெறுவான். அவற்றை மனித இனத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையில் பயன்படுத்தியிருந்தால் நிச்சயமாக அவன் இறைவனால் தண்டிக்கப் படுவான்.

### ஒரு கேள்வி

அப்படியானால் அணுகுண்டுகளையும் ஆட்கொல்லி நச்சு குண்டுகளையும் இன்று சில பல முஸ்லிம் நாடுகளும் பெற்றிருக்கின்றனவே?

‘ஆமாம்! அணுகுண்டுகளைப் பயன்படுத்தி (6) ஆறு லட்சம் மக்களைக் கொன்றது அமெரிக்கா இரண்டாம் உலகப் போரில். இதில் ஜப்பான் நாட்டின் இரண்டு நகரங்கள் இன்றும் நினைவுச்சின்னங்களாக அதாவது மனிதனின் அறிவும் ஞானமும் ஷைத்தானின் கைகளில் சிக்கிக் கொண்டால் என்ன நடக்கும் என்பதன் அத்தாட்சிகள் அவை. அவைதான் ஹிரோஷிமா - நாகசாகி என்ற இரு பெரும் நகரங்கள்.

அதாவது அணுகுண்டு உத்திகள் 1945-இல் உலகில் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படும் உத்திகள் 1989-1990களுக்குப் பின்னர் தான் உக்கிரமாக அறிமுகமாயின. அன்றளவும் இஸ்லாமிய உலகம் இந்த நாசகார ஆயுதங்களுக்கு அனுமதி தந்திடவில்லை.

மார்க்க அறிஞர்கள் இதில் கருத்து வேறுபட்டார்கள். ஒரு சாரார் அமெரிக்கா, வெள்ளை கிறிஸ்தவ ஐரோப்பிய நாடுகள் போன்ற நாடுகள் ‘சிவப்பு ஆபத்திற்குப்’ பிறகு (Red Threat - அதாவது கம்யூனிச நாடுகள் குறிப்பாக ரஷ்யாவுக்குப் பின்) அடுத்த எதிரியாக இஸ்லாத்தையும் முஸ்லிம் நாடுகளையுந்தான் கருதுகின்றன. அவை எந்த நேரமும் அணு ஆயுதங்களை முஸ்லிம்களுக்கும் - இஸ்லாமிய உலகுக்கும் எதிராகப் பயன்படுத்தலாம். குறிப்பாக, இஸ்ரேல் அமெரிக்காவின் உதவியுடன் அணு ஆயுதங்களைக் குவித்துக் கொண்டே இருக்கின்றது. அகண்ட இஸ்ரேலை உருவாக்கிட அணுகுண்டுகளை எந்தத் தயக்கமுமில்லாமல் பயன்படுத்தலாம் என்றெல்லாம் வாதங்களை வைத்தார்கள்.

ஆனாலும், மார்க்க அறிஞர்கள் தங்கள் வாதங்களே சரி! அல்லாஹ் வழங்கிய அருட்கொடையாம் அறிவை அவனியை அழிக்கும் பாதையில் செலவிடக் கூடாது என்றே அடம்பிடித்தார்கள். ஆனால், 1991-ல் தொடங்கி அமெரிக்கா குறைந்த அளவு அணுகுண்டுகளை கொத்து வெடிகளை (Cluster Bomb), விஷ குண்டுகளை ஈராக்கிலும் இதர பகுதிகளிலும் வீசிடத் தொடங்கியது. இதன் பின்னரே மார்க்க அறிஞர்கள் தங்கள் பிடிவாதத்தைத் தளர்த்தினார்கள்.

அப்போதும் அணு ஆயுத உத்திகளைப் பெறலாம். ஆனால், அவை எதிரிகளை அச்சுறுத்தத்தானே தவிர பயன்படுத்துவதற்கில்லை என்றார்கள்.

இந்த மார்க்க அறிஞர்களை இறைமறையின் பின்வரும் வசனம் வழிகாட்டிற்று:

> **அவர்களை எதிர்ப்பதற்காக உங்களால் இயன்ற அளவு பலத்தையும் திறமையான போர்க் குதிரைகளையும் ஆயத்தப்படுத்திக்**

கொள்ளுங்கள். இதனால் நீங்கள் அல்லாஹ்வின் எதிரிகளையும் உங்களுடைய எதிரிகளையும் அச்சமடையச் செய்யலாம். அவர்கள் அல்லாத வேறு சிலரையும் நீங்கள் அச்சமடையச் செய்யலாம். அவர்களை நீங்கள் அறிய மாட்டீர்கள். அல்லாஹ் அறிவான். அல்லாஹ்வுடைய வழியில் நீங்கள் எதைச் செலவு செய்தாலும், அதற்கான நற்கூலி உங்களுக்குப் பூரணமாகவே வழங்கப்படும். அதில் உங்களுக்கு ஒரு சிறிதும் அநீதம் செய்யப்பட மாட்டாது.

அவர்கள் சமாதானத்தின் பக்கம் சாய்ந்து இணங்கி வந்தால் நீங்களும் அதன் பக்கம் சாயுங்கள். அல்லாஹ்வின் மீதே உறுதியான நம்பிக்கை வைப்பீராக. நிச்சயமாக அவன் எல்லாவற்றையும் செவியுறுவோனாகவும் நன்கறிபவனாகவும் இருக்கின்றான்.

அவர்கள் உம்மை ஏமாற்றிட எண்ணினால் நிச்சயமாக அல்லாஹ் உமக்குப் போதுமானவன். அவன்தான் உம்மைத் தன் உதவியைக் கொண்டும் மு·மின்களைக் கொண்டும் பலப்படுத்தினான்.

*(அல்குர்ஆன் 8:60-62)*

**அணு அனுமதிக்குப் பின்**

*ஒருவாறாக மார்க்க அறிஞர்கள் அனுமதியை வழங்கிய பின் அந்த அணு ஆயுத நுட்பங்களைத் தேடிடத் தலைப்பட்டார்கள். ஆனால், அந்த அறிவை அலாதியாகப் பெற்று ஆயிரக்கணக்கான அணு ஆயுதங்களைக் குவித்து வைத்திருந்த இஸ்லாத்தின் எதிரிகள் அந்த அறிவு முஸ்லிம்களுக்குக் கிடைக்காமல் தடுத்து விட்டார்கள்.*

*ஒரு கட்டத்தில் இந்த அணுவியல் அறிவை குறிப்பாக* Nuclear Physics – *ஐ படிக்கும் மாணவர்கள் முஸ்லிம்கள் எனத் தெரிந்தால் ஒன்றிலோ கொலை செய்தார்கள்; அல்லது கல்விக் கூடங்களிலிருந்து உடனேயே அப்புறப்படுத்தினார்கள். இவற்றையெல்லாம் நாம் வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு அவ்வப்போது இவற்றையெல்லாம் விரிவாகத் தந்திருக்கிறோம்.*

*ஆனால், இறுதியில் அந்த அறிவைப் பெற்றோம். இப்போது அந்தக் கல்வியில் இஸ்லாமிய நாடுகளே முன்னணியில் நிற்கின்றன. அவை துருக்கி, ஈரான், ஈராக், மலேசியா என்பனவாகும். இன்றளவும் அவை ஆக்கப்பூர்வமான பணிகளுக்கே இந்த அறிவு இஸ்லாமிய உலகால் பயன்படுத்தப்படுகின்றன. ஓர் உயிரைக் கூட கொலை செய்ததில்லை. அல்ஹம்துலில்லாஹ்!*

**முன்னணியில் இஸ்லாமிய உலகம்**

*இப்போது இஸ்லாமிய உலகம் அமெரிக்காவை விட 3000 மடங்கு சக்தியை அதிகமாக்கும் அணு உத்திகளைக் கண்டுபிடித்துள்ளது. இதில் அமெரிக்காவை வென்றுள்ளது.*

*முஸ்லிம் நாடுகள் எல்லாவிதமான விஞ்ஞான உத்தியிலும் முன்னே நிற்கின்றன என்பதை அமெரிக்காவின்* CIA *என்ற மத்திய உளவுத் துறையே ஏற்றுக் கொள்கின்றது. அமெரிக்காவின்* Montreal Science Metrix *–ம் அதை ஏற்றுக் கொள்கின்றன.* (Sauce Radience 9-15 May 2010)

*உலக அரங்கில் வெளி வந்துள்ள விஞ்ஞான ஆராய்ச்சி அறிக்கைகள் 2010ஆம் ஆண்டு வரை ஒன்றரை லட்சம். அதில் ஏறத்தாழ ஒரு லட்சம் விஞ்ஞான ஆய்வறிக்கைகள் இஸ்லாமிய உலகிலிருந்து வந்தவை. இவற்றை வைகறையில் அட்டைப் படக் கட்டுரையாகத் தந்துள்ளோம்.*

ஈரானும் மன்னர்
ஆட்சியின் கீழ் மேலைநாட்டு
மோகத்தில் வீழ்ந்து கிடந்த
நாட்களில் விஞ்ஞானத்தில்
முன்னேறிட இயலவில்லை.
மாறாக, அது 1980–களில்
இஸ்லாத்தின் பக்கம் சாய்ந்தது.
அதன் பின்னரே அறிவில்
முன்னேறிட விஞ்ஞானத்தில்
அகிலத்தை விஞ்சிட முடிந்தது.

சதாம் ஹுசைனின் காலத்தில்
ஈராக்கில் பெண்
விஞ்ஞானிகள் ஏராளமானோர்
இருந்தார்கள்.

இதில் மெத்தவும் சிலாக்கியமான செய்தி என்னவெனில், இந்த முஸ்லிம் நாடுகள் மேலை நாடுகளின் மோகத்திலும் அவற்றின் கிடுக்கிப் பிடியின் கீழும் இருந்த நாள்களில் அவை விஞ்ஞானத்தில் எள்ளளவும் முன்னேறிட இயலவில்லை. மாறாக, அவை இஸ்லாத்தின் பக்கம் சாய்ந்த பின்னர்தான் விஞ்ஞானத்தில் முன்னேறிட முடிந்தன.

குறிப்பாக, இன்று துருக்கி தயிப் எர்து கானின் தலைமையின்கீழ் எல்லா அறிவுத் துறைகளிலும் அத்தோடு இஸ்லாமிய சகோ தரத்துவத்திலும் தலைநிமிரிந்து நிற்கின்றது. ஆனால், அத்தனையும் இஸ்லாத்தின் பக்கம் சாய்ந்த பின்னர்தான்.

அதே போல், ஈரானும் மன்னர் ஆட்சியின் கீழ் மேலைநாட்டு மோகத்தில் வீழ்ந்து கிடந்த நாட்களில் விஞ்ஞானத்தில் முன்னேறிட இயலவில்லை. மாறாக, அது 1980-களில் இஸ்லாத்தின் பக்கம் சாய்ந்தது. அதன் பின்னரே அறிவில் முன்னேறிட விஞ்ஞா னத்தில் அகிலத்தை விஞ்சிட முடிந்தது.

**அறிவியலாளர்களைக் கொலை செய்யும் அமெரிக்கா**

அதே போல் சதாம் ஹுசைனின் காலத்தில் ஈராக்கில் பெண் விஞ்ஞானிகள் 1500 பேர் இருந்தார்கள். அபூஹுரைப் சித்ரவதைக் கூடத்தில் வைத்து அமெரிக்கர்கள் அவர்களைக் கொலை செய்தார்கள்.

விஞ்ஞான அறிவிலும் ஆராய்ச்சிகளிலும் இஸ்லாமிய உலகோடு போட்டி போட்டிட முடியாதவர்கள் குறிப்பாக அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும், யூதர்களும் முஸ்லிம் விஞ்ஞானிகளைக் குறி வைத்து நயவஞ்சக மாகக் கொலை செய்தார்கள். இந்த நீண்ட பட்டியலை வைகறை வெளிச்சத்தில் பெப்ருவரி திங்களில் (2014) வெளியிட்டிருந்தோம்.

இப்படி ஆக்கப்பூர்வமான அறிவிலும் கல்வியிலும் இஸ்லாமும் இஸ்லாமிய உலகமும் வெற்றிகளைக் குவித்துள்ளன.

MGM

தலையங்கம்

# நீதித்துறையும் கலைஞரின் ஆதங்கங்களும்

**20-04-2014-இல்** *மூத்த பழுத்த அரசியல்வாதி கலைஞர், 'கலைஞர் கடிதம்' ஒன்றை முரசொலியில் எழுதியிருந்தார்.*

*தலையங்கத்திற்கு 'நீதியே நீ இன்னும் இருக்கின்றாயா?' எனப் பெயர் வைத்திருந்தார். ஆயிரக்கணக்கான உடன்பிறப்புகள் படிக்கும் அந்தக் கடிதத்திற்கு.*

*அண்மையில் உச்சநீதிமன்றம் தீர்ப்புகள் என்ற பெயரால் அறிவித்து வரும் சில முரண்பாடுகளை அதில் சுட்டிக்காட்டி வருகின்றார்.*

*அ.தி.மு.க செயலாளர் தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்ட சொத்துகுவிப்பு வழக்கு இழுத்தடிக்கப்படுவதையும், அதே போல் 21-08-1997-இல் வருமான வரிக்கான கணக்குகளைச் சமர்பிக்காமல் விட்டதற்கான வழக்கு 2014 வரை இழுத்தடிக்கப்படுவதையும் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.*

*இதில் உச்சநீதிமன்றம் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களின் வழக்கறிஞர்களைச் சாடியதையும், நான்கு மாதங்களுக்குள் வழக்கை முடிக்க வேண்டும் எனக் கட்டளை இட்டதையும் மேற்கோள் காட்டி இருக்கின்றார்.*

*பின்னர் அதே உச்சநீதிமன்றம் அதே வழக்கை நான்கு மாதங்கள் கழித்துதான் நீதுமன்றங்கள் விசாரிக்க வேண்டும் என்று முரண்பட்டதொரு ஆணையை பிறப்பித்ததையும் இடித்துக்காட்டி இருக்கின்றார்.*

*இதற்கெல்லாம் பின்னால் ....... நடக்கின்றதா என்பதாகவும் தன் ஆதங்கங்களை அள்ளிக் கொட்டியுள்ளார்.*

*அதற்கெல்லாம் மேலாக ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்றவர்களின் தூக்கு ரத்தானது, ஆயுள் தண்டனை என அறிவிக்கப்பட்டது அவர்களை வெளியே விட முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அரசு அக்கறையுடன் நடவடிக்கைகளை எடுத்தது, அந்த நடவடிக்கைகளில் ஒரு பகுதி மத்திய அரசின் அனுமதியைப் பெறுவது, மத்திய அரசின் அனுமதியைப் பெறுகின்ற விவகாரத்தில் விஷயம் நீதிபதி சதாசிவம் அவர்களிடமே வந்தது.*

*தலைமை நீதிபதி சதாசிவம் அவர்களின் தீர்ப்பைப் பெற்றுத்தான் அவர்கள் சிறைக்கு வெளியே வருவது இருக்கின்றது. இந்நிலையில் கோவையில் ஓர் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தலைமை நீதிபதி அவர்கள் இந்த வழக்கு குறித்து தான் ஓய்வு பெறும் ஏப்பிரல் 2ஆம் தேதிக்குள் தீர்ப்பு கூறுவேன் எனக் கூறினார். இது குறித்து கலைஞர் சென்னையில் ஆற்றிய உரை ஒன்றில் தனது ஆதங்கத்தை அலாதியாகக் கூறியுள்ளார். நீதிபதி சதாசிவம் அவர்களின் அறிவிப்பு அரசியல் பின்விளைவுகளை ஏற்படுத்தும் எனக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்:*

“திரு சதாசிவம் அவர்கள் எனக்கும் வேண்டியவர்தான் தெரிந்தவர்தான். ஆனால், சமீபகாலமாக அவருடைய போக்கு இப்படி மாறி இருக்கின்றதோ என்ற சந்தேகம் வழக்கறிஞர்கள் மத்தியில் தோன்றுகின்ற அளவுக்கு ஏன் நடக்கின்றார்.” (முரசொலி)

முன்னாள் சட்ட அமைச்சரும் நீதிபதிகளும்

நமது உச்ச நீதிமன்றமும் அதில் நீதிபதியாக அமைச்சர்களையும் பற்றி அண்மைக்காலங்களில் வெளியான தகவல்கள் அலாதியானவை.

சுதந்திர இந்தியாவில் தலைமை நீதிபதியாக இருந்த நீதிபதிகள் 16+ என்றும் அவர்களில் பெரும்பாலான நீதிபதிகள் லஞ்சம் வாங்குபவர்களாக இருந்தார்கள். சிலர் வேறு பலவீனங்களை உடையவர்களாக இருந்தார்கள் என்று உச்சநீதிமன்றத்திலேயே நேருக்கு நேர் சொன்னார் மூத்த வழக்கறிஞர் ஷாந்தி பூஷன் அவர்கள் - அன்றைய சட்ட அமைச்சர்.

உச்சநீதிமன்றம் அவரை சமாதானப்படுத்திட முனைந்ததே தவிர நீதிபதிகள் நேர்மையானவர்கள் என்று கூறிடவில்லை.

இப்போது ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி சதாசிவம் அவர்கள் மீதும் ஊழல் குற்றச்சாட்டு இருக்கின்றது. இதனை ஓர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட, தகவல் அறிவிக்கின்றது. அதனை Times of India - டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேடு வெளியிட்டுள்ளது.

இதையே கலைஞர் அவர்களும் ஒரு சொல்லில் சுட்டிக் காட்டவே செய்திருக்கின்றார்.

“ஒரு நீதிபதி அவர்தான் தீர்ப்புக் கூறிட வேண்டியவர், அவர்தான் சதாசிவம். சதாசிவத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும். நான் யாரையும் தனிப்பட்ட முறையில் விமர்சிக்க மாட்டேன். சதாசிவம் எனக்கெல்லாம் தெரிந்த நண்பர்தான்.” (முரசொலி 20-04-2014 பக்.4)

ஆகவே, ‘நீதியே நீ இன்னும் இருக்கின்றாயா?’ என்ற கேள்வி பொருத்தமானதுதான். ஆனால், 90 வயதுக்குப் பிறகும் நீதிக்காகப் போராடும் உங்கள் போக்கு பாராட்டுதலுக்குரியது. ஏப்பிரல் 25ஆம் நாள் தீர்ப்பை வழங்கட்டும். அனைவரும் வெளியே வரட்டும். அதில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை என்பதையே கலைஞர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆனால், இது போல் எத்தனை முறை நீதி மறுக்கப்பட்டிருக்கின்றது நம் நாட்டில்.

1. பாபரி மஸ்ஜித் வழக்கு மட்டும் நம் நாட்டில் 120 ஆண்டுகளாக நடந்து வருகின்றது.

2. கிழக்கு இந்தியாவில் 8 மாநிலங்களில் நீதி மறுக்கப்பட்டதால் அந்த மக்கள் போர்க்கோலம் பூண்டார்கள். பின்னர் அதையே காரணங்காட்டி போராளிகளையும் பாமர மக்களையும் ஒன்றுபோலவே கொன்று குவித்தார்கள். அவர்கள் நீதிமன்றங்களுக்கு வந்தபோது விரக்தியின் விளிம்பிற்கே விரட்டப்பட்டார்கள்.

3. அதுபோலவே கஷ்மீரில் இன்றளவும் நீதி மறுக்கப்பட்டு வருகின்றது. இதனால் லட்சக்கணக்கான மக்கள் (PTMS) என்ற மன அழுத்தத்தால் ஏற்படும் நோய்களுக்கு ஆளாகி சாவு முகத்திலே விநாடிகளைக் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அங்கெல்லாம் அநீதி இழைப்பது நமது இராணுவம். அந்த இராணுவம் இழைக்கும் அநீதிகளிலிருந்து அதனைக் காப்பாற்றிடும் சட்டம் ஒன்று 55 ஆண்டுகளாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்தச் சட்டத்தைத்தான் ‘Armed Forces Special

Powers Act' என்கிறார்கள்.

இந்தச் சட்டத்தைப் பின்வாங்கிட வேண்டும்; எதிர்த்திட வேண்டும் என 13 ஆண்டுகளாக, உண்ணாவிரதமிருக்கின்றார் கரோம் ஷர்மிளா என்ற பெண்மணி. அவள் மீதும் வழக்கு. தன்னை மாய்த்துக் கொள்ள முயற்சி செய்கிறாள் என்று குற்றச்சாட்டு.

இவற்றையெல்லாம் எதிர்க்க ..............................................

ஆனால், நாங்கள் எதிர்க்கின்றோம். இந்த அநியாயங்களையெல்லாம் மக்கள் மன்றத்தில் சேர்க்கின்றோம். நீதி மன்றங்களையும் கேட்கின்றோம்.

அரசும் காவல்துறையும் பெருமாள்களை வீட்டுக்கு அனுப்பி குசலம் விசாரிக்கின்றார்கள். ஆனாலும், விடாமல் நீதிக்கான எங்களது பெரும் போர் தொடர்கின்றது.

அதே நேரத்தில் வரலாற்றில் இடம்பெற்ற நீதிமிக்க ஆட்சிகளை ஆய்வு செய்கின்றோம். இந்த உலகின் நீண்ட நெடிய வரலாற்றில், நீதிமிக்க ஆட்சிகள் இறைவனின் வேதங்களால் வழிகாட்டடப்பட்ட இறைத்தூதர்களாலும் அந்த தூதர்களின் அழகிய முன்மாதிரிகளைப் பின்பற்றியவர்களாலும்தான் நடாத்தப்பட்டிருக்கின்றது.

அந்த நீதிமிக்க ஆட்சியைத்தான் இந்தியாவுக்கும் விரும்பினார் அண்ணல் காந்தியடிகள்.

அதற்காக கணப்பொழுதேனும் உழைத்திட ஆளில்லை. அந்தப் பொன்னரிய வழிகாட்டுதல்களைப் பெற்ற முஸ்லிம்களும் அதனை மக்கள் மன்றத்தில் வெளிச்சம் போட்டுக் காட்டிட தயாராக இல்லை. ஆக, இறைவனின் அந்த நீதிமிக்க ஆட்சியை ஆய்வு செய்வோம். அரவணைப்போம். அவனியில் நிலைநாட்டிட முன்வருவோம்.

மனிதவாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் ஓர் அழகிய வழிகாட்டுதலை வழங்கிவிட்டு இறைவன் இப்படி கட்டளை இட்டான்.

"நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே அவன் உங்களுக்கும், மார்க்கமாக்கி இருக்கின்றான். ஆகவே, (நபியே) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும், இபுராஹீமுக்கும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் நாம் உபதேசிப்பதும் என்னவென்றால், 'நீங்கள் அனைவரும் சன்மார்க்கத்தை நிலைநாட்டுங்கள். அதில் பிரிந்துவிடாதீர்கள் என்பதே!"

இந்த நூஹ் (அலை) அவர்கள் முதல் நபிமார்களை ஏன் அனுப்பினான் என்பதைக் குறிப்பிடும்போது இறைவன் இப்படிக் கூறுகின்றான்:

"நிச்சயமாக நம் தூதர்களை தெளிவான அத்தாட்சிகளுடன் அனுப்பினோம். அன்றியும் மனிதர்கள் நீதியில் நிலைப்பதற்காக அவர்களுடன் வேதத்தையும் நீதத்தின் துலாக் கோலையும் இறக்கினோம்." (அல்குர்ஆன் 57:25)

"எனவே, நபியே! நேர்வழியின் பக்கம் நீர் அவர்களை அழைத்துக் கொண்டே இருப்பீராக! மேலும் நீர் ஏவப்பட்ட பிரகாரம் உறுதியுடன் நிற்பீராக! அவர்களுடைய இழிவான மன இச்சைகளை நீர் பின்பற்றாதீர். இன்னும் அல்லாஹ் இறக்கி வைத்த வேதங்களை நான் நம்புகிறேன். அன்றியும் உங்களிடையே நீதி வழங்கும்படி நான் ஏவப்பட்டுள்ளேன். அல்லாஹ்வே எங்களுடைய இறைவன். அவனே உங்களுடைய இறைவனும் ஆவான்." (அல்குர்ஆன் 45:15)

நீதிமிக்க இந்த ஆட்சியின் மாட்சியை உலகெல்லாம் பரப்புவோம்.

அதையே இங்கே நிலைநாட்டுவோம்.